விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 21 வெள்ளிக்கிழமை (07.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 292

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## பொருத்தமான இடத்தில்

# நேரடிப் பேச்சுக்களை தொடர்ந்தால்

# சமாதான சூழலை தோற்றுவிக்க முடியும்



## நோர்வேயிடம் புலிகள் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான அமைதிப்பேச்சுக்கள் பொருத்தமான இடத்தில் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு நடைபெறும் பட்சத்திலேயே சமாதான சூழலைத் தோற்றுவிக்க முடியும். இது தொடர்பாக சர்வதேச சமூகம் சரியான முடிபை மேற்கொள்ளுமென நம்புகின்றோம். சர்வதேசத்தின் சமாதான ஆதரவு, அனுசரணை ஆகியவற்றின் அடிப்படையிலேயே தமிழர் தரப்பின் நம்பிக்கை கட்டியெழுப்பப் பட்டது என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வேத் தரப்பிடம் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு மன்றம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி இம் மனுமீதான விசாரணை எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதன்போது மனுதாரர் தரப்பில் சட்டத்தரணிகள் கருத்துக்கள் முன்வைக்கப்படவுள்ளது.

அரச சார்பற்ற அமைப்பின் செயற்பாட்டாளரான கலாநிதி குமார் ரூபசிங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில் பொலிஸ்மா அதிபர், ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின்சில்வா , சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச-4)

## சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பிரட்ஸ்கர் சந்தித்துப் பேச்சு



தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சியில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். உலங்கு வானூர்தி மூலம் காலை 9.15 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்த ஹான்ஸ் பிரட்ஸ்கரை தமிழீழ சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் உடன் இருந்தனர். (ச-4)

## வெள்ளவத்தையில் நேற்றுக் குண்டுவெடிப்பு

### ஒருவர் காயம் ;வான் சேதம்



கொழும்பு வெள்ளவத்தை நெல்சன் பிளேசில் உள்ள தினமுரசுப் பத்திரிகை அலுவலகத்திற்கு அருகில் காலை 7.45 மணியளவில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்துள்ளது.

பத்திரிகை அலுவலகத்திற்கு முன்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயலாளர் ஏ.ஜெயராஜ் என்பவர் பயன்படுத்தும் இந்து கலாசார அமைச்சின் வாகனத்திற்கு வைக்கப்பட்ட குண்டே இவ்வாறு வெடித்துள்ளது.

குண்டு வைக்கப்பட்டிருந்த வான் சின்னாபின்னமாகியது. குண்டுவெடிப்பில் ஈ.பி.டி.பி. உறுப்பினரான விஜயகாந்தன் என்பவர் காயமடைந்தார். தினமுரசு பத்திரிகை அலுவலகத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காலை வேளையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. சம்பவம் இடம்பெற்ற பகுதியை பொலிஸாரும் இராணுவத்தினரும் சுற்றி வளைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-4, 8)

## நோர்வேயிலிருந்து கண்காணிப்புக்குழு

யுத்தநிறுத்த உடன்படிக்கையினை மேற்பார்வை செய்வதற்காக மற்றுமொரு கண்காணிப்புக் குழு நோர்வேயில் இருந்து இலங்கைக்கு வரவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான நிபுணரான இயன் மாட்டீனும் இக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை த்தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-4,9)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை பாலையூற்றில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கிங்ஸ்லி வீரரட்ண (வயது 34) என அடையாளம் காணப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது அவரை பின்தொடர்ந்து சென்ற இருவர் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டு விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவரின் சடலம் தற்போது திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.பல்கலைக்குத் தெரிவான 33 மருத்துவ மாணவர் பிரச்சினை

(கொழும்பு)

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான சில உப விதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இவற்றை முன்மொழிந்து உரையாற்றினார்.

இலங்கை-பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை உள்ளிட்ட ஒப்பந்தங்களுக்கு சட்ட அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த உப விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

டீசல், சமையல் எரிவாயு, பால்மா ஆகியவற்றின் மீதான வற்வரியை நீக்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும், மக்கள் நலன்கருதி அந்தத் தீர்மானத்தை எடுத்ததாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, நாட்டில் நிலையான தீர்வுக்கொள்கை ஒன்று இருக்க வேண்டும் இதனைத் தயாரிக்கும் முயற்சியில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜினதாச கித்துள்கொட அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய தீர்வைகளை அறவிடுவதற்கு முறையான திட்டம் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் சபை முதல்வர் நிமால் சிறிபாலடி சில்வா மருத்துவ துறையில் உயர் கல்வியைத் தொடர்வதற்காக யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த 33மாணவர்களின் பிரச்சினை குறித்து அரசாங்கம் கவனஞ்செலுத்திவருவதாகத் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட தென்னிலங்கை மாணவர்களை தென்னிலங்கையிலுள்ள வேறு பல்கலைக் கழகங்களில் அனுமதிக்க வேண்டும் என ஹெலஉறுமய உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் எழுப்பிய வினாவொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இப்பிரச்சினைகுறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது எனக்குறிப்பிட்டார். (து-7)

# திருகோணமலை, அம்பாந்தோட்டையில் அனல் மின் உற்பத்தி நிலையங்கள்?

(கொழும்பு)

திருகோணமலை அம்பாந்தோட்டை பகுதிகளில் நுரைச்சோலையில் அமைக்கப்படவுள்ளது போன்ற அனல் மின் உற்பத்தி நிலையங்களை எதிர்காலத்தில் அமைக்க உத்தேசித்துள்ளதாக எரிசக்தி வலுசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு தேவையான மின் உற்பத்தியின் 65வீதமானவை டீசல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் பெறப்படுவதாகவும் இதன் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்குறித்து அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றவர்கள் எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிப்பதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தினார்.

நுரைச்சோலை மற்றும் மேல் கொத்மலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்களை இயன்றளவு குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதால் அந்தத் திட்டங்களை மேற்கொள்வதற்கு தடைகளை ஏற்படுத்த வேண்டாம் என்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் நிலவும் எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக இவ்வாறான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் அவசியம் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (து-7)

# விளையாட்டு விழா

பருத்தித்துறை பிரதேச அல்வாய்க் கொத்தணிக் குடும்பத்தைச் சேர்ந்த ஏழு முன்பள்ளிகளின் விளையாட்டுவிழா அல்வாய் நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் கொத்தணித்தலைவர் ஏ.அகிலன் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பருத்தித்துறை முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆலோசகர் எஸ்.திருச்செல்வம் இதில் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட சுனாமிச் செயலக முன்பள்ளித்திட்ட இணைப்பாளர் வி.கிருஸ்ணசிங்கம், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச முன்பள்ளித் தலைவர் ரீ.சிவச்செல்வம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அல்வாய் கொத்தணிக் குடும்ப முன்பள்ளிகளில் நக்கீரன், இளங்கோ, சற்கோட்டை, திரவியநாதன், கலைமகள், இன்பருட்டி, திக்கம் ஆகிய ஏழு முன்பள்ளிகள் அடங்குகின்றன. (ற-52)

# சூழல் பாதுகாப்பு முன்னோடி தினம்

சாவகச்சேரி பிரதேச சுற்றுச் சூழல் சுகாதாரத்தைப் பாதுகாத்து தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சூழல் சுகாதாரத்தைப் பேணும் பொருட்டு இனறு சூழல் பாதுகாப்பு முன்னோடி தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்துள்ளார். (து-108)

# ஐசிங்கேக் அலங்காரம்

ஜோகிஸ் கேக் அலங்காரக் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது. யாழ்.பெட்டா எசன்ஸ் சப்லயர்ஸ் ஆதரவில் யோகி அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது. இக்காட்சி எதிர்வரும் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதால் தினமும் காலை 9.00 மணிமுதல் இரவு 7மணிவரை சகலரும் இக்கண்காட்சியை பார்வையிடலாம்.

இக் கண்காட்சியை நேற்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி வைபவரீதியாக நாடா வெட்டி திறந்துவைத்து கண்காட்சியை பார்வையிட்டார். மேலும் இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நெறியின் பணிப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் கலாநிதி மனோன்மனி சன்முகதாஸ், யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, நுண்கலைத்துறை பேராசிரியர் சபாஜெயராஜா யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய செயலாளர் சொலமன் சிறில ஆகியோரும் கலந்துகொண்டு இக் கண்காட்சியை பார்வையிட்டார்கள்.

யோகி அக்கடமியில் இம்முறை பயிற்சியை முடித்துக்கொண்ட 30 மாணவிகளது ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் வகையிலேயே அறபுதமாக இக் கண்காட்சி அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கண்காட்சியில் முதல் மூன்று இடங்களில் பெறும் மாணவிகளுக்கு பரிசில்களும் ஏனையவர்களுக்கு சானறிதழ்களும் வழங்கப்படவுள்ளது. (அ-19)

# யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்

## அமெரிக்கா நம்பிக்கை தெரிவிப்பு

அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தெற்காசிய நடவடிக்கைகளுக்குப பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும வர்த்தக பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச அபிவிருத்தி தொடர்பாக அமெரிக்க முகவர் நிதி உதவியின் கீழ் இலங்கையில் சுனாமிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா மேலும் உதவிவழங்கும் என்று உதவி இராஜாங்க செயலாளர் அறிவித்ததாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உதவி இராஜாங்கச் செயலாளர் பல பகுதிகளுக்கு விஜயம செய்து நிவாரண மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை பார்வையிட்டுள்ளார். (ந-7)

# இராசி பலன்

07.10.2005

(புரட்டாதி 21, வெள்ளிக்கிழமை)

சதுர்த்தி பிற்பகல் 4.09 மணி வரை

விசாகம் முற்பகல் 8.02 மணி வரை

இராகுகாலம் 10.32-12.02 மணி வரை

சுபநேரம் 6.02-7.32 மணி வரை

சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | கோபப்படுதல், காரிய தடங்கல், போசன சுகக்குறைவு, உடல் நலக்குறைவு. |
| இடபம் | காரிய அனுகூலம், தெய்வதரிசனம், உறவினர் வருகை, போசனசுகம். |
| மிதுனம் | தேகாரோக்கியம், முயற்சி கைகூடும், தெய்வசிந்தை, நல்ல சம்பவம். |
| கடகம் | அமைதிக்குறைவு, பணக்குறைவு, வேலைச்சுமை, திடீர்நன்மை |
| சிங்கம் | தனவிரயம், தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம், புதிய விடயம். |
| கன்னி | சிந்தனை மிகுதி, மனோதைரியம், முயற்சி கைகூடும், போசனசுகம். |
| துலாம் | மனோசங்கடம், எடுத்தகாரியம் தாமதமாகும், பணவிரயம், ரோகநிலை. |
| விருச்சிகம் | தெய்வதரிசனம், நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | காரிய அலைச்சல், புதிய திருப்பம், சோம்பல் நிலை, சுபசெலவு. |
| மகரம் | தனத்தானிய சேர்க்கை, தெய்வதரிசனம், குடும்ப சுகம், காரிய சித்தி. |
| கும்பம் | பிரபுத்தனம், நன்கொடை, இஷ்டசித்தி, போசனசுகம். |
| மீனம் | உத்தியோக பலிதம், ரோகநிலை, எதிர்பாராத செலவு, வீண்பயம். |

பழைய நேர்படி கணிப்பிடப்பட்டது.

வளவன்

# சுகாதார அமைச்சக அதிகாரி மீது விசாரணை நடத்தத் தீர்மானம்

சுகாதாரத்துறை அமைச்சகத்தின் பிரதி இயக்குநருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே தொடர்பிருப்பதாக கூறப்படுவது குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா அறிவித்துள்ளார்.

அரசு மருத்துவமனைக்குரிய பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஸ்கேனிங், எக்ஸ்ரே இயந்திரங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்களை மொனறாகலையில் உள்ள தனது தனியார் மருத்துவ மனைக்கு பிதி இயக்குநர் அனுப்பியுள்ளார்.இம் மருத்துவமனையில் கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். ஸ்கானிங் வசதியானது மாகாணங்களில் உள்ள பெரிய மருத்துவமனைகளில் மட்டுமே உள்ளன. இந்த ஸ்கேனிங் உபகரணங்கள் சர்வதேச அமைப்புக்களான ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்டவையின் நிதி உதவியுடன் பெறப்பட்டவை.

மொனறாகலை மருத்துவமனையின் பெரும்பான்மையான பங்குகளை அந்த அதிகாரி தன் மனைவியின பெயரில் பதிவு செய்துள்ளார்.பொதுமக்களின் சொத்தை ஆயுதக் குழுவினரின் சிகிச்சைக்குப் பயன்படுத்திய குற்றத்திற்காக அவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என சுகாதாரத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (ற-4)

# குறைபாட்டை நிவர்த்திக்க கோரிக்கை

திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர், ஆங்கில ஆசிரியர் இன்றி இயங்கிவருவதாகவும், இப் பாடசாலையின் கட்டட வேலை அரைகுறையாகப் பூர்த்தியாகாத நிலையில் உள்ளதாகவும், பெருந்தொகையான பாடசாலைத் தளபாடங்கள் உடைந்த நிலையில் உள்ளதால் இப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் பலவகையான அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாகவும் இதனால் கடந்த சில ஆண்டுகளாக அப்பாடசாலையின் கல்வி வளர்ச்சி மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுவதாகவும் திருநெல்வேலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் நல்லூர்க் கோட்ட வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளனர்.

அரைகுறையாகக் காணப்படும் அப் பாடசாலைக் கட்டத்தை பூர்த்திசெய்து தரும்படியும், பாடசாலைக்கான அதிபரையும் ஆங்கில ஆசிரியரையும் உடனடியாக நியமிக்கவும் கல்வித்தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கும்படியும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## நுலகத்திறப்பு விழா

பருத்தித்துறை சாயி மந்திரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலகம் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.00மணியளவில் வடபிராந்திய சத்தியசாயி சேவாநிலையங்களின் இணைப்புக் குழுத் தலைவர் ஆர்.வசந்தசேனனால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பாதபூஜை, பஜனை, நாராயண சேவை என்பனவும் இடம்பெறவுள்ளது. (த-104)

# அன்பு மாணவர்களே!

## நவராத்திரி பூசையையொட்டி

## ‘நவராத்திரிப் பாமாலை’

பகுதியை வலம்புரி வெளியிடுகிறது. மாணவர் களாகிய உங்களின் கவிதையும் இதில் இடம்பெற வேண்டு மாயின், நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம், பெயர் ஆகிய விபரங்களுடன்

“வலம்புரி”

இல. 03, இரண்டாம் ஒழுங்கை,

பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ.ர்)

# யாழ்.நகரை முன்மாதிரி நகரமாக அமைக்க முன் வாருங்கள்

## சனசமூக நிலைய ஆண்டு விழாவில் பிரேமச்சந்திரன்

"77ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் சுண்டுக்குழி சனசமூக நிலையத்துக்குப் பல தேவைகள் இருப்பதாகவும், முக்கியமாக அவர்களுடைய நூலகத்தில் புத்தகங்களை உரிய முறையில வைத்திருப்பதற்கான தளபாடங்கள் தேவையாக இருப்பதாகவும் அதற்கான உதவிகளை செய்யுமாறும் கேட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன மாதிரியான புத்தகங்கள தேவை என்பதைப பட்டியலிட்டுத் தந்தால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஏனைய தளபாடங்களைப் பொறுத்த வரையில் தொடர்ந்தும் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறை பட்சத்தில் அடுத்த வருட முற பகுதியில் அதற்கான நிதியை ஒதுக்கிக் கொடுக்க முடியும்."

இவ்வாறு சுண்டுக்குழி சன சமூக நிலையத்தின் 77 ஆவது ஆண்டு விழாவில பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.பிரேமச்சந்திரன் கூறினார்.

தமிழ் மக்களுடைய வரலாறு, மிக நீண்ட நெடிய வரலாறு. பல மேதைகளை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். பல கல்விமான்களை உருவாக்கி இருக்கின்றோம். ஆனால் இன்றைய இளைய சமுதாயம் எங்களுடைய பழைய வரலாற்றை, நாங்கள் எவ்வாறு முதியோர்களைக் கனம் பண்ணுகின்றோம், பெரியவர்களை மதிக்கின்றோம், குழந்தைகளை மதிக்கின்றோம் என்பவற்றைப் புரிந்து கொணடால் நிச்சயமாக மிகவும் பண்பான சமுதாயத்தை உருவாக்கி கொளளலாம். எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூடிய எதிர்காலத்தைப் பற்றி கனவு காணக்கூடிய சமுதாயம் ஒன்று எங்களுக்குத் தேவை.

அந்த வகையில் புத்தகங்களை அல்லது பத்திரிகைகளை வாசிப்பது, விளையாட்டுப போட்டிகளை நடாத்துவது என்பவறறுக்கு அப்பால் முக்கிய கடமைகள் பல இருக்கின்றன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு கிராமத்து சன சமூக நிலையத்தினாலும் வாசிக சாலைகளாலும் கிராமத்து மக்களை கலை, கலாசாரம், பண்பாடு போன்ற சகல வழிகளிலும் வளர்த்தெடுக்க முடியும்.

இன்று முக்கியமான பிரச்சினையாக இருப்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பு. யாழ்ப்பாண நகரமென்பது வெறுமனே யாழ்.மாவட்டத்திற்கு மாத்திரமல்ல வடக்கு, கிழக்கு, தமிழீழத்திற்கே, ஒரு கலாசாரத் தலை நகரமாக இருக்கின்றது. அந்தத் தலைநகரம் எப்படி இருக்க வேண்டும என்ற சிந்தனை எமக்கு வேண்டும். எமது தலைநகரம் எவ்வாறு எப்படியான ஒரு அழகான தலைநகரமாக இருக்க வேண்டும், எவ்வளவு தூரம் சுகாதாரத்தைப் பாதுகாக்கின்ற ஓர் இடமாக இருக்கவேண்டும், அது ஒரு முன்னோடியான நகரமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை வேண்டும்.

சுற்றுச்சூழல் என்று கூறும் பொழுது அதில் ஒன்று பசுமை. மரம், செடி, கொடிகளை நாட்டுவதென்பது. கிராமத்தை சுத்தமாக வைத்திருப்பதென்பது, பொலித்தீன் போன்ற விடயத்தை அகற்றுவதற்கு முன்னுரிமையைக் கொடுப்பதென்பது, வீதிகள் போன்றவற்றை எவ்வளவு தூரம் கவனமாக அல்லது அழகாக குப்பை கூழங்களை வீதியில் கொட்டாமல் வைத்திருப்பது என்பது போன்ற பல விடயங்கள் இருக்கின்றன.

ஒரு கிராமம் உண்மையாகவே ஒரு முன்மாதிரியான கிராமமாக இருந்தால் ஏனைய கிராமங்கள அதனை பின் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே இருக்கின்றன. உங்களுடைய சனசமூக நிலையத்திற்கான உதவிகளை செய்வதற்கு தயாராக நாங்கள் இருக்கின்றோம். அதேபோல இந்த யாழ்பபாண மாநகர வளர்ச்சியில், உங்களது கிராமத்து வளர்ச்சியில், கிராமத்து பண்பாட்டு வளர்ச்சியில், கிராமத்து சுற்றுச் சூழல வளர்ச்சியில் நீங்கள் முழுமையான கவனம் எடுக்கவேண்டும்.

யுத்த நிறுத்தமொன்று தற்காலிகமாக அமுலுககு வந்த கடந்த 3 வருடத்தில் யாழ்ப்பாண மாநகரததினுடைய போக்குவரத்து சாதனங்கள், வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், கார்கள் போன்றவையாக மூனறு மடங்குக்கு மேல அதிகரித்து இருக்கின்றது.

ஆனால வீதிகள் அதிகரிக்கவில்லை. வீதிகள் அகலமாக்கப்படுத்தப்படவில்லை. நாளாந்தம் எத்தனையோ விபத்துக்கள் நடப்பதை நாங்கள் பார்க்கின்றோம் எத்தனையோ மக்கள் அநியாயமாக சாக வேண்டிய சூழல் இருக்கின்றது. நாங்கள் வீதிப் போக்குவரத்து முறைகளைக் கடைப்பிடிக்காததே இதற்குக் காரணம் ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி தெருக்களில் 3 பேர் சமாந்தரமாகச் செல்லும் நிலையை வீதிகளில் பார்க்கின்றோம். ஆகவே இப்படியான சூழல்கள், இப்படியான நிலைமைகள் மாற வேண்டும்.

வீதிகளை அகலப்படுத்துவது சுலபமான காரியம் அல்ல. பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டில் இருக்கக்கூடிய அண்ணன் தம்பி அனுப்பக்கூடிய பணம் போன்றவற்றால், நீங்கள் வாகனங்களை வாங்கலாம். ஆனால் வீதிகளை அகலப்படுத்துவது மிகவும் கடினமான செயல். அப்படியான சூழ்நிலையில குறைந்த பட்சம் வீதிப் போக்குவரத்துக்களையாவது கவனத்தில் எடுத்துக்கொண்டால் அநியாயமான இழப்புக்களை, தவிர்க்கக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (து)

## நவராத்திரிப் பாமாலை



### இன்று நான்காம் நாள்

### பசிப்பிணியை நீக்கிடம்மா!

செல்வம் கொடுத்திடும் சீதேவியே – உன்
சீரடிகள் போற்றுகின்றேன் என் பாட்டினிலே
செந்தமிழ் நாடன்றோ எம்நாடு – அதில்
தினம் தினம் நிகழ்வதோ பட்டினிச் சாவு

பாரினிலே பரம் பொருளாய் நீ இருந்து – உன்
பார்வையினாலே பட்டினியைப் போக்கிடம்மா
பாராளும் நாயகியே பதம் பணிந்தேன்
பாரினிலே பசிப்பிணியை நீக்கிடம்மா.

S.தர்ணன்,
யா/இந்துக்கல்லூரி.

### வரம் தந்திடம்மா

உலகைக் காக்கும் அன்னை பராசக்தியே
உன் திருவடியை வணாங்கிடுவோம் கயமைகள் நீங்கிடவே
ஒன்பது நாளில் மூன்று சக்தியாய் ஒளிகொடுக்கும் தீபமே
ஒவ்வொரு மனிதருக்கும் வரம்தந்திட வாருமம்மா

சிங்கவாகனத்தில் வீற்றிருக்கும் நாயகியையும்
தாமரை மலரில் வீற்றிருக்கும் நாயகியையும்
வெண்டாமரையில் வீற்றிருக்கும் நாயகியையும்
சிறப்பிக்கும் ஒன்பது ராத்திரியே நவராத்திரி.

சி.ராதிகா,
யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

# யாருடைய ஆட்சிக்காலத்தில் ஏராளமான பண நோட்டுக்கள் அச்சிடப்பட்டன?

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எழுப்பப்பட்டுள்ள சர்ச்சை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக்காலத்தில் அதிக அளவில் பண நோட்டுக்கள் அச்சிடப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் குறித்து பிரதமரின் ஜனாதிபதி வேட்பாளர் ஒருங்கிணைப்புக் காரியாலயம் விளக்கமளித்துள்ளது.

தற்போது ஆளும் கூட்டணி பண நோட்டுக்களை அச்சிட்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற முயற்சி செய்தாலும் கூட தமது ஆட்சிக்காலத்தில் ரூபா நோட்டுக்களை கூடுதலாக வெளியிட்டு பண வீக்கத்தை அதிகரிக்கவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருப்பது எந்த அளவிற்கு உண்மையானது என்பது மத்திய வங்கி அறிக்கைகள் மூலம் நிருபணம் ஆகியுள்ளதாக தேர்தல் பிரசார ஒருங்கிணைப்புக் காரியாலயம தெரிவித்துளளது.

2001 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட பண நோட்டுக்களின் பெறுமதி 324 கோடியே 50 இலட்சமாகும்.

2002ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்கவின் ஆடசிக் காலத்தில் 1174 கோடி 70 இலட்சம் ரூபா பெறுமதியான நோட்டுக்கள் அச்சிடப்பட்டன.

இது 2003 ஆம் ஆண்டில் 1047 கோடி 70 இலட்சமாக இருந்தது.

2004 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாத காலத்தில் 1815 கோடி 50 இலடசம் ரூபா வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் 2004 ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து இதுவரை வெளியிட்ட பண நோட்டுக்களின் பெறுமதி 103 கோடி 10 இலட்சத்தால் குறைத்துள்ளது.

இதனடிப்படையில் பார்க்கும் போது இலங்கையின் வரலாற்றில கூடுதல் நாணய நோட்டுக்கள் அச்சிடப்பட்டிருப்பது ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில்தான் என ஜனாதிபதி வேட்பாளரது பிரசார நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் காரியாலயம் சுட்டிக்காட்டியுள்ளது. (து-7)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு மீன்பிடிப்படகு இயந்திரம் வழங்கல்

(பச்சிளைப்பள்ளி)

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிப்படைந்து இன்று வரை தொழில் உதவி இன்றி தவித்துக் கொண்டிருக்கின்ற மீன்பிடித் தொழிலாளர்களின் ஒரு பகுதியினருக்கு கரித்தாஸ் (மனித முன்னேற்ற நடு நிலை மன்றம்) நிறுவனத்தின் உதவியுடன் 150 படகுகளும் 100 இயந்திரங்களும் மருதங்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.மறை மாவட்ட பங்குத் தந்தையும் தாளையடி தேவாலய பங்குத் தந்தையும், உடுத்துறை கடற்றொழில் பரிசோதகர் கணேசமூர்த்தியும் மருதங்கேணி அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவனும் கலந்துகொண்டனர். (அ-47)

# கல்வித் தரவீழ்ச்சிக்குக் காரணம் தொலைக்காட்சி நாடகங்களே

## பொறியியலாளர் சிவபாலன் தெரிவிப்பு

(கோப்பாய்)

வளங்கள் நலிவடைந்த காலங்களில் உச்ச நிலையிலிருந்து உச்ச பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த கல்வித் தரம் ஓரளவிற்கு வளங்கள் சீர்பெற்ற இக் காலத்தில் வீழ்ச்சியடைந்தும் நலிவடைந்தும் காணப்படுகின்றமை. யாழ்ப்பாண கல்விச் சமூகத்தை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. இந்நிலைக்குத் தீர்வுகாண அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டுமென நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்டப் பாடசாலை வேலைப் பகுதி பொறியியளாலர் கு.சிவபாலன் தெரிவித் தார்.

கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்ற இநநிகழவில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் பாடசாலைக்குத் தேவையான பௌதிக வளத்தேவைகளை இனங்கண்டு தேவைக்கேற்ப கட்டம் கட்டமாக தற்போது நிறைவு செய்யப்படுகின்றன. தகவல் தொழில நுட்பத் தேவைகள், ஆரம்பக் கலவிப் பாடசாலைகளை அடைப்புசெய்தல் போன்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆயினும் அதன் பலன்கள் இனனும் விரிவு படுத்தப்படாமல் தேக்க நிலையில் உள்ளது. இத்தவறு அதிபர், ஆசிரியர்களுடையதல்ல இது பெற்றோர்களுடையதே ஏனெனில இரவு வேளைகளில் பிள்ளைகளின கல்வியில் அக்கறையில்லாமல் பெற்றோர்கள் நாடகங்களைப் பார்ப்பதற்காக தொலைக்காட்சிப் பெட்டிகளின் பாவனையை மிகைப் படுத்தி வருகின்றனர். இது கல்வியின் தடைக்கு முழுக்காரணமாகவும், சிறுவர் உரிமை மீறலாகவும் அமைந்து விடுகின்றது.

எனவே பிள்ளையின் கல்வி நடவடிக்கைக்கான ஒத்துழைப்புகளை பிள்ளை பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இக்குறைகளை நீக்க பெற்றோர்கள் தாமாகவே முன் வருவது பொருத்தமானது. எமது அழியாத செல்வம் கல்விச் செல்வம். இரண்டு தசாப்த யுத்தகாலங்களிலும் குணடுகள் துளைக்காமலும், துப்பாக்கிரவைகளால் தாக்கப்படாமலும் நாம இடம்பெயர்ந்த நிலையில் எம்முடன் வந்து அழியாத நிலையில் வீறு நடை போட்ட இந்தச் செல்வமானது வளங்கள் நிறைந்த இந்தக் காலத்தில் வீழ்ந்து செல்வதை உயர்த்திட அனைத்துத் தரப்பினரும் தமது முழுமையான பங்களிப்பினை வழஙகிட முன் வருவதே இன்றைய காலததின் தேவையாகும். (அ-79)

### தெய்வீக இசைச் சொற்பொழிவு

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜப் பிள்ளையார் கோயிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு தினமும் மாலை 6.00 மணிக்கு சிவநெறிக கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் 'அம்பிகையின் அருள்' என்னும் பொருளில் தெய்வீக இசைச் சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது. (ற)

### சிவ தொண்டன்

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய வெளியீடான சிவதொணடன் புரட்டாதி, ஐப்பசி மாத இதழ் வெளிவந்துள்ளது. (அ)

# 1988,89 இல் இன வன்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

நாட்டில் 1988,1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் உயிரிழந்தவர்களின குடும்ப உறுப்பினர்களுக்கு நஷ்ட ஈடுவழங்கும் திட்ட மொன்றை ஆரம்பிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் க்ட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவிததுள்ளார்.

ஸ்ரீ கோத்தாவில் கடந்த செவ்வாய்க்கிழமை பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிககையில்,

குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம் பெற்ற இனக்கலவரத்தினால் நாட்டின் அபிவிருத்தி பாரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளது எனறும் அவர் குறிப்பிட்டார்.

1988, 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் இனக்கலவரங்களால் உயிரிழந்த குடும்ப உறுப்பினர் களின ஒன்றியத்தை ஏற்படுத்தும் நோக்கில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இனக் கலவரத்தின் போது உயிரிழந்த, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறவினர்கள மற்றும் உறுப்பினர் கள இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ஐ. தே. கவையும் விசாரிப்பதாக இருந்தால் விமல் வீரவன்ஸ மீதான வழக்குக்கு ஆதரவு

## -அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்ட படுகொலைகளையும் விசாரிப்பதாக இருந்தால் விமல் வீரவன்ஸவை தண்டிக்கக் கோரும் வழக்கை அரசாங்கம் ஆதரிக்கும் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

நாட்டின் படுகொலைச் சம்பவங்களுக்கு காரணமாக இருந்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவை தண்டிக்க வேண்டும் என்று குமார்ரூபாசிங்க வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்குத் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜோன் அமரதுங்க கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இதனைத் தெரிவித்தார்.

குமார் ரூபாசிங்கவின் மனுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்ட படுகொலைகளையும் சேர்த்தால் விமல் வீரவன்ஸ மீதான வழக்கிற்கு ஆத ரவாக அரசாங்கம் நீதிமன்றில் அறிக்கையை தாக்கல் செய்யும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் 60 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டதையும் அம்மனுவில் இணைத்தால் அரசாங்கம் விமல் வீரவன்ஸ மீதான வழக்கை ஆதரித்து பிரமாணவாக்கு மூலம் தாக்கல் செய்யும் .

குமார் ரூபசிங்க வழக்கைத் தாக்கல் செய்துள்ளதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உடந்தை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சட்ட விவகாரங்களை கையாளும் அசோக சமரட்ணவே அந்த வழக்கிற்கான வரைவை தயார் செய்து கொடுத்தார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஜோன் அமரதுங்க, "லங்கா தீப பத்திரிகையில் வெளியான செய்தியில் அடிப்படையில்தான் குமார் ரூபசிங்க வழக்குத் தொடர்ந்ததாகவும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கமானது 1987முதல் 1992ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் விஜய குமாரதுங்க உள்ளிட்ட 6,577 பேர் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்பு கொண்டது என்றும் தெரிவித்தார். (ரு-4)

## இன்று வேட்புமனுக்கள் தாக்கல்!

# அசம்பாவிதம் ஏற்படலாம் என்பதால் அதிஉச்ச பாதுகாப்புக்கு ஏற்பாடு

(கொழும்பு)

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வுப் பிரிவு பொலிஸ்மா அதிபருக்கு நேற்று முன்தினம் த்கவல் அனுப்பியுள்ளது.

இதனடிப்படையில் இன்று வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படும் பொழுது எவராவது சந்தேகத்துக்குரியவராக தென்பட்டால் அவர் தொடர்பில் உடனடியாகத் தகவல் தருமாறு தேர்தல் செயலக பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேட்பாளர்களுக்கு அதி உச்சப் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பிரதான மற்றும் ஏனைய வேட்பாளர்களின் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் அவதானமாக நடந்துகொள்ளவேண்டியுள்ளது.

பெரும்பாலும் தற்கொலைக் குண்டுதாரிகள் மற்றும் சிற்றூர்திக் குண்டுத்தாக்குதல்கள் என்பன இடம்பெறக்கூடிய ஏது நிலை இருக்கின்றமையினால் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் சந்தேகத்திற்கிடமானவர்கள் குறித்து உடனடியாகத் தகவல் தரவேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என காமினி நவரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

(ரு-4)

# தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் 55 மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது அசம்பாவிதங்களை ஏற்படுத்தும் வகையில் வெடிபொருட்களை எவராவது பயன்படுத்தினால் அவற்றை உடனடியாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க 55 மோப்பநாய்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

கண்டி அஸ்கிரியாவில் இயங்கும் பொலிஸ் நாய் வளர்ப்பு நிலையத்தில் இருந்து இந்நாய்கள் நாட்டின் முக்கிய நகரங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பொதுவாக தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளவிருக்கும் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் திட்டத்தின் முன்னோடியாகவே நாய்கள் இவ்வாறு கூட்டங்கள் இடம்பெறும் பகுதிகளில் சேவையில் அமர்த்தப்படவுள்ளன.

இலங்கையில் பெருந்தொகையான நாய்கள் இவ்வாறு தேர்தல் ஒன்றின் போது சேவையில் அமர்த்தப்படுவது இதுவே முதன் முறையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ரு-7)

## சர்வதேச சிறுவர் முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ. கூ.சங்கத்தின் சர்வதேச சிறுவர் முதியோர், தினம் இன்று பிற்பகல் 3.மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பிரபல சமூக சேவையாளர் ந. பாஸ்கரனும் (ஜேபி.) சிறப்பு விருந்தினராக நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் இ.சிவஞான சுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் , கௌரவிருந்தினர்களாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ. சேதுராஜா,கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வி. சிவசிதம்பரம், கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி அதிபர் எஸ். சிறிராமச் சந்திரன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் 2005ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெறும் 40 மாணவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கலும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கவிஞர் சா.வே. பஞ்சாச்சரம் சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார். (ரு-9,101)

## தொண்டர் ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சை

(பருத்தித்துறை)

அரசாங்கத்தின் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி வலயத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் நேர்முகப் பரீட்சைகள் எதிர் வரும் 12,13ஆம் திகதிகளில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் அறிவித்துள்ளார்.

இந்நேர் முகப்பரீட்சைக்கு 176தொண்டர் ஆசிரியர்கள் தோற்றவுள்ளனர். (ரு-52)


## யாழ்.பல்கலையில் இடம்பெற்ற 24ஆவது பட்டமளிப்பு விழாக் காட்சிகள்...














படங்கள்:- ஞா. ஐங்கரன்

# சச்சின் 9

## மின் பார்வை

என். சொக்கன்

# ஒரு புயலின் கதை

சச்சினும் காம்ப்ளியும் தங்களது சாரதாஷ்ரம் பள்ளி அணிக்காக விளையாடி வந்தார்கள். அது தவிர அச்ரேகர் தனக்குத் தொடர்பு இருக்கிற க்ளப் அணிகளிலும் அலுவலக அணிகளிலும் அவர்களைச் சேர்த்துவிட்டு விளையாடச் செய்தார் சச்சின். ஒரு போட்டியில் குறைந்த ரன்களில் ஆட்டமிழந்துவிட்டால் அவனைத் தனது ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு நகரத்தின் வேறொரு பகுதியில் நடக்கிற இன்னொரு மேட்ச்சில் அவனைச் சேர்த்து விளையாடச் சொல்வார் அச்ரேகர். அங்கே அவுட் ஆனபிறகு மீண்டும் ஸ்கூட்டர். மீண்டும் இன்னொரு போட்டி இப்படி பேட்டும் கையுமாக நகர் முழுக்க சுற்றிச் சுற்றி விளையாடிப் பழகினான் சச்சின். அச்ரேகரின் இந்தப் பழக்கத்தாலும் ஊக்குவிப்பாலும் சச்சின் ஒரே நேரத்தில் பதின்மூன்று அணிகளுக்கு விளையாட முடிந்தது. ஒருமுறை ஒரே நாளில் கைல்ஸ் ஷீல்ட் போட்டியொன்றில் சதமடித்து அதைத் தொடர்ந்து நடந்த ஹாரிஸ் ஷீல்ட் போட்டியில் இருநூறு ரன்களுக்கு மேல் குவித்து அசத்தினான் சச்சின். இப்படி நாள் முழுக்க நெட்டிலும், போட்டிகளிலும் பேட்டிங் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த சச்சின் பந்து வீசும் ஆசையையும் விட்டுவைக்கவில்லை. மணிக்கணக்கில் பேட் செய்த பிறகும் அநேகமாக ஒவ்வொரு நாளும் ஐம்பது ஓவர்களுக்கு மேல் மிதவேகப் பந்து



வீச்சில் அவன் ஈடுபடுவதுண்டு. மறுநாள் பயிற்சிக்கு வரும்போது லேசாகத் தோள் வலிக்கிறது என்று சிரித்தபடி சொல்வானே தவிர மீண்டும் மட்டை எடுக்கவோ பந்து வீசவோ அவன் தயங்கியதே இல்லை. ஒரே நாளில் நான்கைந்து போட்டிகளில் விளையாடி நூற்றுக் கணக்கில் ரன்கள் அடித்த பிறகும் கூட ஓய் வெடுக்கத் தோன்றாமல் மாலை ஆனதும் நெட் ப்ராக்டீஸுக்கு வந்து நிற்பான் சச்சின். ஒரு நாளும் தளர்வறியா மனம் என்று அபிராமி அந்தாதியில் வருவது போல!

சச்சினுக்கு 11 வயதானபோது அவன் தனது பள்ளிக்காக விளையாட ஆரம்பித்தான் . 15 வயதுக்கு உட்பட்ட பள்ளிச் சிறுவர்களுக்கான கைல்ஸ் ஷீல்ட் போட்டிகளில் தான் சச்சின் முதன்முறையாக விளையாடினான். சில நாட்களுக்குப் பின்17 வயதுக்கு உட்பட்ட வர்களுக்கான ஹாரிஸ் ஷீல்ட் அணியிலும் இடம்பிடித்தான். ('ஹாரிஸ் ஷீல்ட் போட்டியில்தான் சச்சின் தனது முதல் சதத்தை டான்பாஸ்கோ பள்ளி அணிக்கெதிராக அடித்தான்!)

அந்த வயதில் சச்சின் விளையாடுவதைப் பார்தவர்கள் எல்லோரும் ஒரு விஷயத்தை மிகவும் வியந்தார்கள் அது சச்சின் அடித்த பவுண்டரிகள். சாதாரணமாகப் பள்ளிச் சிறுவர்கள் விளையாடுகிற போட்டிகளில் ஒரு ரன் இரண்டு ரன்களைத்தான் அதிகமாகப் பார்க்கமுடியும்.பவுண்டரிகள் அடிக்கிற அளவுக்கு அவர்களின் சின்னக் கைகளில் வருபோதாது. ஆகவே பையன்கள் ஓடி ஓடித்தான் ரன் சேர்ப்பார்கள். இந்த விஷயத்தில் சச்சின் மட்டும் அதிசய விதி விலக்காயிருந்தான். அவனது ஷாட்கள் பலமானவையாக இருந்தன. பந்து வருவதற்கு முன்பே அதன் பாதையைக் கச்சிதமாக ஊகித்து விடுகிற அசாத்தியத் திறமையும், மைதானத்தில் ஃபீல்டர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை மனப்பாடமாக அறிந்தவன் போல் அவர்களின் கைகளுக்குச் சிக்காத பகுதிகளில் பந்தை விரட்டுகிற நுணுக்கமும் அவனது பெரிய பலம்.



ஆகவே சச்சின் விளையாடுகிற போதெல்லாம், நான்கும் ஆறுமாக ரன்கள் பறப்பதும், அவனது சக்தி மிகுந்த ஷாட்களில் பந்துகள் தொலைந்து போவதும் வழக்கமாக நடக்கிற நிகழ்ச்சிகள்.

தனது பள்ளி அணியைத் தவிர அச்ரேகரின் ஆதரவால் சசானியன் கிரிக்கெற் க்ளப், இளம் பார்ஸி கிரிக்கெற் க்ளப், காமத் நினைவு கிரிக்கெற் க்ளப், ஹிந்து சேவக் கிரிக்கெற் க்ளப் போன்ற பல்வேறு அணிகளுக்கும் ஓய்வில்லாமல் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தான் சச்சின்.

கங்கா லீக் போன்ற கடினமான போட்டிகளில் சச்சின் சிறப்பாக விளையாடியதால், கிரிக்கெற் தேர்வாளர்களின் பார்வை அவன்மேல் விழுந்தது. பதினைந்து வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மும்பை அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான் சச்சின். பின்னர், மேற்கு மண்டல அணியிலும் இடம் பிடித்தான்.

பள்ளிப் போட்டிகளிலும் சச்சினின் சதங்கள், சாதனைகள் தொடர, சீக்கிரமே அவன் சாரதாஷ்ரம் பள்ளி அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டான். அதைத் தொடர்ந்து நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் அவன் குவித்த ரன்கள்-276,159 (நாட் அவுட்), 123,33 (நாட் அவுட்), 156,42, 150 (நாட் அவுட்),197,67,53 மற்றும் 216! சச்சினின் நம்பகமான ஆட்டத்தால் 1985-86ஆம் ஆண்டுக்கான கைல்ஸ் ஷீல்ட் மற்றும் ஹாரிஸ் ஷீல்ட் இரண்டு கோப்பைகளையும் சாரதாஷ்ரம் பள்ளி வென்று சாதனை படைத்தது.

மும்பையிலிருந்து வெளிவரும் 'மிட்டே' நாளிதழ், சச்சினின் முதல் பேட்டியை பிரசுரித்தது. அந்தப் புகழ் வெளிச்சம் சச்சினின் மேல் விழுந்தபோது அவன் இன்னும் பதின் பருவத்துள் நுழைந்திருக்காத சிறுவன். குரல் உடைந்திராத, மிகுந்த கூச்ச சுபாவமுள்ள பையன். அப்போது அவனது ஆர்வமெல்லாம் போட்டிகளில் தானே தவிர பேட்டிகளில் இல்லை.ஆகவே நிருபர் கேட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு அவன் சார்பாக அவனது அண்ணன்தான் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

(தொடரும்)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 11ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் சமஸ்கிருதத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி வி.சிவசாமியால் "பரத நாட்டியத்தில் கோட்பாடுகள், மரபுகள் மற்றும் மாற்றங்கள் ஒரு நோக்கு" என்னும் பொருளில் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்த்தப்படவுள்ளது. (அ)

* * *

எதிர்வரும் 10ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் பல்கலைககழக பொருளியல் பேராசிரியர் கலாநிதி விசாகசுந்தரம் நித்தியானந்தனால் '1984-2004 காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தின் சமூகப் பொருளாதார முறைமை ஒரு ஆய்வுக் கண்ணோட்டம்' என்னும் பொருளில் சேர் பொன் இராமநாதன் நினைவுப்பேருரை நிகழ்த்தப்படவுள்ளது. (அ)

# வவு.இல் பெண்கள் மாநாடு

(கொழும்பு)

தமிழீழப் பெண்கள் சங்கமம் எழுச்சி நாளை முன்னிட்டு வவுனியாவில் நாளை பெண்கள் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்டப் பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள இப் பெண்கள் எழுச்சி சங்கமம் முத்தையா மண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணி வரை நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பல்வேறு பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்துகொள்வார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# தேசிய மரநடுகை விழாவையொட்டி மாணவரிடையே போட்டிகள்

(கொழும்பு)

எதிர்வரும் 15ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் தேசிய மர நடுகை விழாவை முன்னிட்டு சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சு கல்வி அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளையும் நடாத்த ஒழுங்குகளைச் செய்துள்ளது.

"பூமி நிலைத்திருப்பதற்கென மரங்கள் வளர்ப்பு" என்ற தலைப்பில் நடாத்தப்படும் இந்தப் போட்டிகள் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு இடையே தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் நடாத்தப்படவுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்கள் பத்திரமுல்லையில் உள்ள இயற்கை வள அமைச்சில இம் மாதம் 10ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் வெற்றி பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே பன்னிரண்டாயிரத்து 500 ரூபாய்,ஏழாயிரத்து 500 ரூபாய், ஐந்தாயிரம் ரூபாய் ரெக்கப்பண் பரிசுகள் வழங்கப்படவுள்ளதுடன் அடுத்த 25 நிலைகளைப் பெறுவோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# 'சட்டத்தரணி' வேடமிட்ட தமிழ்ப்பெண்ணுக்கு 10 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

சட்டத்தரணி போல வேடமிட்டு நீதிமன்றத்துக்குள் நடமாடியதாக கைது செய்யபபட்ட தமிழ்ப்பெண்ணிற்கு எந்தவித மனநோயும் இல்லை என்று வாழைத்தோட்டப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இது தொடர்பான வழக்கு அன்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிமன்றத்தில் வைத்திய அறிக்கையை சமர்ப்பித்த பொலிஸார் சந்தேக நபருக்கு எந்தவித மனநோயும் இல்லை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாகவும் அதனால் ஆள் மாறாட்டம் செய்ததற்காக அவருக்கு எதிராக ஆள் மாறாட்ட வழக்கு தொடரப்படும் என்றும் தெரிவித்தனர்.

சநதேக நபரான முத்தழகு கார்த்திகாயினியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபரின் கணவர் நஞ்சருந்தி மரணமடைந்தமையினால் அவர் மன உளைச்சலுக்கு இலக்காகியிருந்ததாகவும் அதனைக் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

ஆள்மாறாட்டம் செய்த விடயத்தில் தான் குற்றவாளி என சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார். ஆள்மாறாட்டம் செய்து நீதிமன்றத்தினுள் சட்டத்தரணியைப் போல் நடமாடியது மிகப்பெரிய குற்றம் எனக் கூறிய நீதவான் சறோஜினி குசலா வீரவர்த்தன, சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அவருக்கான தண்டனை பற்றி அன்றைய தினம் அறிவிப்பதாகவும் தெரிவித்தார். (ற-4)

# ஐ.தே. கவின் தேர்தல் விஞ்ஞாபனம் மக்களிடம் கையளிக்கும் செயற்திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நாட்டு மக்களுக்கு கையளிக்கும் விசேட செயற்திட்டம் ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆரம்பமான செயற்திட்டம் தெஹிவளை நகர் வரை வந்தது. அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமனற உறுப்பினர்கள், தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்களிடம் கையளித்தனர்.

இச் செயற்திட்டம் குறித்து கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன,மக்கள் எமது கட்சியின் கொள்கைகள் குறித்து கூடிய கவனம் செலுத்துவதற்காக நாம் இந்த செயற்பாட்டை ஆரம்பித்துள்ளோம்.

செய்வதைச் சொல்லும் கட்சியின் தலைமைத்துவத்தின் கொள்கைப் பிரகடனத்தை வீட்டுக்கு வீடு சென்று கையளித்தோம்.இது அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்று குறிப்பிட்டார். (ற-8)

# தீயணைப்பு சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மிக நீண்டகாலமாக சபையின் பாவனையிலிருந்த தீயணைப்பு இயந்திரம் திருத்தம் செய்யப்படவுள்ளதால் மறு அறிவித்தல் வரை தீயணைப்பு சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார். (அ)

## இன்று ஒரு தகவல்

# களிப்பு-மகிழ்வு-ஆனந்தம்

"எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது சார்" என்று சொல்லிக்கொண்டு என்னிடம் வந்தார் ஒருவர். என்னிடம் வந்து கொஞ்சநேரம் கதைத்தபின் அவர் அப்படிச் சொல்லியிருந்தால் அதில் ஒரு அர்த்தம் இருந்திருக்கும். வருவதற்கு முன்பே வாழ்க்கை வெறுத்துவிட்டது என்கிறார்.

"என்ன சார் விஷயம்?" என்று விசாரித்தேன். "எங்கள் வீட்டில் தினமும்-மூன்றுவேளை ஒரே மாதிரி சாப்பாடு சார்... வித்தியாசமே கிடையாது. இப்படியே மூன்று மாதமாக சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன். அதைவிட பட்டினி கிடந்து சாகலாம் என்று தோன்றுகிறது" என்றார். ஒரு பெரியவர் சொன்ன தத்துவத்தைச் சொல்வதற்கு ஆள் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்போது ஒருவர் கிடைத்துவிட்டார் விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்.

நாம் அனுபவிக்கும் உணர்வுகளில் களிப்பு, மகிழ்வு, ஆனந்தம் இது மூன்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. மேம் போக்காகப் பார்க்கும் போது இந்த மூன்றும் ஒன்று போலத் தோன்றும். ஆனால் அது அப்படி இல்லை. களிப்பு என்பது உடம்பைப் பொறுத்தது. மகிழ்வு என்பது மனதைப் பொறுத்தது. ஆனந்தம் என்பது ஆன்மாவைப் பொறுத்தது. இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புகளின் தன்மையும் வெவ்வேறு.

முதலில் களிப்பு என்பதை எடுத்துக் கொள்வோம் நமது நலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய பொருள்களுக்கு சில விசேட குணங்கள் உண்டு. அது எப்படியென்றால் விரைவில் சலிப்பை உண்டுபண்ணும். ஒருவர் அந்தப் பொருளை எடுத்துக்கொண்டால் அது இன்னொருவருக்குக் குறைந்துவிடும். உணவு, உடை இதெல்லாம் களிப்பைத் தரக்கூடிய பொருட்கள்.

உதாரணமாக ஒரு சாப்பாட்டு மேசையில் ஒரு பாத்திரத்தில் 10 இட்லிகள் உள்ளன. அதில் இரண்டு இட்லியை நாம் தட்டில் எடுத்துவைத்து உண்கிறோம். நாம் சாப்பிட்ட அந்த இட்லி நிச்சயமாக எதிரில் உட்கார்ந்திருப்பவருக்கில்லை. நாம் சாப்பிட்ட அதே இட்லியை அவரும் சாப்பிட முடியாது. அவர் வேறு தான் எடுக்க வேண்டும். அதேமாதிரி நாம் ஒரு சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டால் அது இன்னொருவருக்கு இல்லை என்று ஆகிவிடும். ஒரு சட்டையை ஒரே நேரத்தில் இரண்டு பேரும் போட்டுக்கொள்ள முடியாது.

புலன்களுக்கு களிப்பைத்தரக் கூடிய இதுபோன்ற பொருட்கள் எல்லாம் முதல் முறை நமக்குத் தரும் களிப்பை இரண்டாவது முறை கொடுக்காது. மூன்றாவது முறை இன்னும் குறையும். கடைசியில் வெறுப்பாகவே மாறும். ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். முதல் இட்லி தரக்கூடிய சுவையை முப்பதாவது இட்சி தருமா? முதல் முறை புது உடையை போட்டுக் கொள்ளும் போது நமக்கு இருக்கும் களிப்பு 100ஆவது முறை போட்டுக்கொள்ளும் போது இருக்குமா? இதுதான் களிப்பு. அதாவது சீக்கிரமே சலிப்பைத் தரக்கூடியது. ஒருவர் எடுத்தால் இன்னொருவருக்கு குறைந்து போகக்கூடியது.

ஆனால் மகிழ்வு என்பது அப்படி இல்லை. ஒருவர் அனுபவிப்பதனால் இன்னொருவருக்கு குறைந்து போகாது. காலையில் சூரியன் உதயமாவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறீர்கள். அதையே இன்னொருவரும் பார்த்து சந்தோஷப்படலாம். ஒரு நல்ல சங்கீதத்தைக் கேட்கிறீர்கள். ஒரு அழகான ஓவியத்தை ரசிக்கிறீர்கள். நீங்கள் ரசிக்கும் அதே நேரத்தில் இன்னொருவரும் அதை ரசிக்கலாம். அதனால் அது குறைந்துவிடப் போவதில்லை. இது மகிழ்வு. ஆனால் ஒன்று ஒரே பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தால் கடைசியில் அலுப்புத்தட்டும்.

மகிழ்வு என்பது எப்படிப்பட்டதென்றால் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதால் குறையாது. ஆனால் ஒரே பொருள் மீண்டும் மீண்டும் அனுபவிப்பைத் தரும்போது முதலில் மகிழ்வு அதிகரித்து அது மங்கிக் குறைந்துவிடும்.

சரி மூன்றாவதாக சுகம் தரக்கூடிய ஆனந்தம் எப்படிப்பட்டது? இது நமக்குள் உள்ளேயிருந்து சுரப்பது. மனம் சலனங்களிலிருந்து விடுபடும்போது இந்த ஆனந்தம் நமக்குக் கிடைக்கும். இது நிலையான சுகம். ஆத்ம சுகம். களிப்பிலிருந்து மகிழ்வுக்கும் மகிழ்விலிருந்து ஆனந்தத்திற்கும் செல்வதுதான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

இவ்வளவு விடயத்தையும் கேட்டுவிட்டு இந்தக் காலத்து பையன் ஒருவன் என்னிடம் சொல்கிறான் "சார்! இப்போது நீங்கள் சாப்பாட்டு மேசையில் 10 இட்லியை வையுங்கள். எதிரில் இன்னொருவருரை உட்காரவையுங்கள். நான் களிப்பு மகிழ்வு எல்லாம் தாண்டி நேரடியாக ஆனந்தத்திற்குப் பயணம் செய்து காட்டுகிறேன்" என்றான்.

"அது எப்படி...? என்ன செய்வாய்?" என்று கேட்டேன் ஆச்சரியமாக. இரண்டு இட்லி சாப்பிட்டால் தானே களிப்பு. நான் பத்து இட்லியையும் மொத்தமாக சாப்பிடுவேன். அடுத்தவனுக்கு எதுவும் கிடைக்காது. அவனுக்குக் கிடைக்காத படி நாமே சாப்பிடுகிறோமே... அதுதானே நமக்கு ஆனந்தம்?" என்கிறான் சார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# மு.கா, இ.தொ.கா வின் ஆதரவினால் பாரிய பெரும்பான்மை கிடைக்கும்

## ரணில் நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினைக் காண்பதற்காக இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக முதலில் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மேயர் செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தோட்டத் தொழிலளர் காங்கிரஸ் ஆகியவை தனக்கு ஆதரவளித்துள்ளதன் மூலம் தனக்குப் பாரிய பெரும்பான்மை கிடைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் என்னால் பெறமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது. 10 இலட்சம் வாக்குகளை அதிகளவில் பெறுவது என்று ஐக்கிய தேசியக் கட்சி இலக்கு வைத்துள்ளது. இந்தப் பெருவாரியான வாக்குகள் இலக்கில் வடக்கு-கிழக்கு இணைக்கப்படவில்லை.

மட்டக்களப்பைச் சுற்றிய ஒரு சில இடங்களில் மட்டுமே கருணா குழு உள்ளது. அவர்கள் தேர்தலைச் சீர்குலைக்கக் கூடும் என்ற தகவல் ஏதும் வெளியாகவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளும் வடக்கு-கிழக்குப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளவும் தேர்தலை நடத்தவும் இடையூறு விளை வீக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.



கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு தனிப் பிரதேச ஒதுக் கீடு வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது. இதுகுறித்து அமைதிப் பேச்சு மேசை யில் முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்க வேண்டும். இவ் விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னருடன் கலந்து ஆலோசிக்கவுள்ளேன்.

இலங்கையை பத்து 'வருடங்களுள் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றவேண்டும். அடுத்த சந்ததியினருக்கு அபிவிருத்தி அடைந்த நாடாகவே கொடுக்க வேண்டும். இது எமது கடமை. இதற்காக நாம் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைத் தேடவேண்டுமாயின், இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் ஒன்றாக செயற்படவேண்டும். இல்லையென்றால் இட் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது. இதனை யாரும் முன்னர் மேடையில் கூறியதில்லை என்றார். (ற-4)

# புலிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன

## மா.க. ஈழவேந்தன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் குற்றம்சாட்டியுள்ளார்.



மா.க.ஈழவேந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை அச்சப்பட வைப்பதற்காக மேற்கத்தேய சக்திகள் சில ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விடுதலைப்புலிகள் குறித்து தவறான தகவல்களை அளித்துள்ளன.

விடுதலைப் புலிகள் மீதான பயணத்தடையை ஐரோப்பிய ஒன்றியம் மறுபரிசீலனை செய்து முந்தைய நிலைமையைத் தொடரச் செய்ய வேண்டும்.

ஆழிப் பேரலையால் தமிழர்கள் பாதிக்கப்பட்டது தொடர்பாக பல அரசாங்கங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் விளக்கமளித்தனர். சர்வதேச சமூகமும் தமிழ் மக்கள் உதவி வேண்டி நிற்பதைப் புரிந்துகொண்டிருந்தது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை மூலம் சர்வதேச சமூகத்தின் அனுதாபப் பார்வை திசை திருப்பப்பட்டுவிட்டது.

கடந்த காலங்களில் லக்ஷ்மன் கதிர்காமர் தான் உலகைச் சுற்றி வந்து தமிழ் மக்களின் பாதிப்புகள் குறித்து தவறான தகவல்களை அளித்துவந்தார். இறுதி முடிவு ஏதும் எடுக்கப்படாத நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை அக்கொலை யில் தொடர்புபடுத்திக் கூறியுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது எல்லை கடந்த பொறுமையை வெளிப்படுத்தியுள்ளனர். ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்த பிறகு அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகமும் பாராட்டியது. தற்போதைய அரசாங்கமும் முந்தைய அரசாங்கங்களும் வடக்கு-கிழக்கில் வாழும தமிழ் மக்களை அழித்தொழிப்பதிலேயே முனைப்புக் காட்டி அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்றன.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள்ளை விமர்சனம் செய்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அரச பயங்கரவாதம் தொடர்பாக அமைதி காத்திருக்கிறது. சிறாரை படையில் சேர்ப்பதாகக் குற்றம் சுமத்துவோர் வன்னியில் செயற்பட்டு வரும் சிறார் நலன் மையங்களைப் பார்வையிட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் அந்த மையங்களில் பராமரிக்கப்படும் அந்தச் சிறுவர்களின் இயல்பான புன்னகையை அவர்கள் வந்து பார்க்கவேண்டும். 1990 களின் மத்தியில் நவாலி தேவாலயம் மற்றும் ஆலயங்கள் மீது குண்டு வீசி பக்தர்களையும், குழந்தைகளையும் ஸ்ரீலங்கா அரசு படுகொலை செய்தது. இந்தப் படுகொலைகள் தொடர்பாக லக்ஷ்மன் கதிர்காமர் மௌனம் சாதித்தது மட்டுமில்லாமல் இது தொடர்பாக பொய்த் தகவல்களையும் உலக நாடுகளில் பரப்பினார். அது போன்ற நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே ஐரோப்பிய ஒனறியம் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிட்டுள்ளது என்று அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-4)

# நாட்டைத் துண்டாட ஒருபோதும் அனுமதியளிக்க முடியாது -பிரதமர்

(கொழும்பு)

நாட்டின் வளங்களையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்கும் மற்றைய அரசியல் கட்சிகள் தமது இந் நம்பிக்கையை மீறிச் செயற்படப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ மகாராமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


எமக்கு ஒரு பொறுப்புள்ளது. நாட்டின் வளங்களையும், கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டும். எமது நாட்டையும் பாதுகாக்க வேண்டும்.



இந்த நாட்டை துண்டாட அனுமதிக்கக் கூடாது.

இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டும். எனக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் என் மேல் வைத்துள்ள நம்பிக்கையை நான் ஒருபோதும் மீறத் தயாரில்லை. அது எனது பொறுப்பும் கடமையுமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு



67

1950 - இல் வடலூரில் நடைபெற இருந்த தூபி நீராட்டு விழாவிற்குப் பாகவதரைக் கச்சேரி செய்ய அழைக்கும்பொருட்டு சென்னைக்குச் சென்றேன். அவர் அப்பொழுது ஹரிதாஸ் என்ற படத்தில் காதல் சீனில் நடித்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் திடுக்கிட்டு ஓடிவந்து வணங்கினார். நான், "ஏப்ரல் 24 - ஆம் திகதி வடலூரில் தூபி நீராட்டு விழா. தாங்கள் வந்து கச்சேரிசெய்ய வேண்டும" என்றேன். அதனை அவர் வெகு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு தூபி நீராட்டு விழாவில் வந்து சமானமில்லாத உயர்ந்த முறையில் பாடி கூடியிருந்த மக்கள் சமுத்திரத்தை மகிழ வைத்தார்.

1958இல் காங்கேயநல்லூரில் நடைபெற இருந்த கும்பாபிஷேகத்திற்கு வரவேண்டுமென்று அழைத்து. அவருடைய நிதி நிலைமை அப்பொழுது நன்றாக இல்லாமையினால் 50ரூபாய் வழிச் செலவுக்குக் கொடுத்தேன்.

கும்பாபிஷேக சமயத்தில் அவர் கண் சிகிச்சைக்காகச் சென்னை சென்றிருந்தார். கும்பாபிஷேகத்திற்கு அவரால் வர இயலவில்லை. சென்னையிலிருந்து ஒருவரைக் காங்கேய நல்லூருக்கு அனுப்பியிருந்தார்.

அனுப்பப்பட்ட அவர் காங்கேயநல்லூரில் என்னைச் சந்தித்து. "சுவாமி! பாகவதருக்குக் கண்சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அவரால் கச்சேரிக்கு வர இயலவில்லை. தாங்கள் கொடுத்த 50ரூபாயைத் தங்களிடம் கொடுத்து முருகன் பிரசாதம் வாங்கி வருமாறு என்னை அனுப்பினார் என்று கூறி என் கையில் 50ரூபாய் கொடுத்தார். தியாகராஜ பாகவதருடைய பெருந்தன்மையை நினைத்து என் உள்ளம் உருகியது. அவர் நலத்துக்காக முருகப் பெருமானை வேண்டி அருட்பிரசாதம் அனுப்பி வைத்தேன்.

திருச்சியில் பாகவதர் என்னைச் சந்தித்து "சுவாமி! தாங்கள் செய்த காங்கேய நல்லூர் கும்பாபிஷேகத்திற்கு வர இயலவில்லை. அதற்கு என்னை மன்னிக்கவேண்டும் இனி தாங்கள் எந்த ஊரில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தாலும் நான் வந்து இலவசமாகப் பாடுவேன்" என்று உள்ளம் உருகிக் கூறினார். இது பாகவதருடைய பண்பாட்டைப் புலப்படுத்துகின்றது.

## 10. விரிவுரையின் விளைவு

நான் மாதந்தோறும் மதுரையில் விரிவுரை புரிவது வழக்கம். மதுரையில் முனிசிபல் மானேஜரும் என் நண்பருமாகிய V.S.லோகநாதப்பிள்ளை அவர்களின் இல்லத்தில் தங்குவேன். மதுரையில் நீதிபதி A.S.P. ஐயர் (இவர் மலையாளம்) பேச்சில் வல்லவர். மதுரையில் நடைபெறும் 'கல்ஸர் லீக்' என்ற சபையில் என்னை அழைத்துவந்து விரிவுரை செய்விக்குமாறு லோகநாதப்பிள்ளையைக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது அந்த நீதிபதி லோகநாதப்பிள்ளையைப் பார்த்து 'வாரியாரின் விரிவுரை 45நிமிடத்திற்கு மேல் இருக்கக் கூடாது' என்றார். லோகநாதப் பிள்ளை அவரைப் பார்த்து 'வாரியார் சிறந்த பேச்சாளர் இன்னும் சிறிதுநேரம் அதிகமாக இருந்தால் நன்றாக இருக்கும்' என்றார் நீதிபதி 'எத்தனைப் பெரிய அறிஞராயினும் நேரம் அதிகம் எடுத்துக்கொள்ளக்கூடாது' என்று கண்டித்துக் கூறினார்.

அன்று ஞாயிறு. லோகநாதப்பிள்ளை என்னைக் காரில் அழைத்துக்கொண்டு போகும் பொழுது. நீதிபதிக்கும் தனக்கும் நிகழ்ந்த உரையாடலைக் கூறி 'ஐயா! நீதிபதி வாயால்.'இன்னும் அரை மணி நேரம் பேசுங்கள்' என்று சொல்ல வேண்டும். அப்படி அவர் சொல்லுகின்ற அளவிற்கு உங்கள் பேச்சின் திறம் இருக்க வேண்டும். அப்படிப் பேசினால் தான் தங்களை நான் சிறப்பாகக் கருதுவேன்" என்றார்.

நீதிபதி தலைமையில் விரிவுரை தொடங்கியது. நான் பக்தி என்னும் பொருட்பற்றிப் பேசினேன். அங்கிருந்தோர் அனைவரும் அறிஞர்கள். அதனால் பேச்சுமிகவும் உயர்வாக அமைந்திருந்தது. 45நிமிடம் முடிந்தவுடன் என் பேச்சு முடிவுபெற்றது. நீதிபதி எழுந்து என்னைப் பார்த்து 'இன்னும் 1/2 மணிநேரம் பேச வேண்டும்' என்று என்னை கேட்டுக்கொண்டார். நான் லோகநாதப்பிள்ளையைப் பார்த்து கண் இமைத்தேன். அவர் என்னைப்பார்த்து புன்முறுவல் பூத்தார். பிறகு 1/2 மணிநேரம் பேசினேன் நீதிபதி தான் பின்னுரையில் 'வாரியார் வாக்கு கங்கா ஜலம் போல பெருக்கெடுத்து ஓடுகின்றது. மிக உயர்ந்த தத்துவ முத்துக்கள் அவர் வாக்கிலிருந்து உதிர்கின்றன' என்று பாராட்டிப் பேசினார்.

## 11. பகுத்தறிவாளரின் பாராட்டு

வேலூரில் என்னுடைய தொடர் விரிவுரை நடைபெற்றுக்கொண்டிருந்தது. முனிசிபல் மண்டபத்தில் பாரதிதாசன் (புரட்சிக் கவிஞர்) அவர்கள் தலைமையில் தமிழர் முன்னேற்றக்கூட்டம் நடைபெற இருந்தது. சில அன்பர்கள் அந்த நிகழ்ச்சியில் நான் பேச வேண்டுமென்று அழைத்துக்கொண்டு சென்றார்கள். நான் ஒருவன் தான் திருநீறு பூசிக்கொண்டும். உருத்திராட்சமாலை அணிந்துகொண்டும் சென்றேன். பாரதிதாசன் என்னைக்கண்டு இவர் புராணப் பிரசங்கியாயிற்றே! இவருக்கு ஆழ்ந்த கருத்து என்ன தெரியும்? என்று அலட்சியமாகக் கருதினார். அவர் முன்னுரை கூறி என்னை 1/2மணி நேரத்துக்கு மேல் ஒரு நிமிடமும் பேசக்கூடாது இன்றும் பலர் பேச இருக்கிறார்கள். ஆதலால் என் பேச்சு சுருக்கமாக இருக்கவேண்டுமென்று கூறினார்.

நான் கொடியாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு செந்தமிழ் என்னும் தலைப்பில் பேசத் தொடங்கினேன். செம் என்னும் சிறப்பு அடைமொழி தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் உண்டு. பிற எந்த மொழிகளுக்கும் இல்லை. என்று ஆராய்ச்சி பு,ர்வமாகவும். ஆதார பு,ர்வதாகவும் அணி அணியான நுட்பக்கருத்துக்களைச் சொல்மாரியாகப் பொழிந்தேன். சபையோர்கள் மகிழ்ச்சியினால் பலமுறை கரகோஷம் கொடுத்து ஆரவாரம் செய்தார்கள். தலைமை பு,ண்டிருந்த பாரதிதாசன் வாயைப் பிளந்துகொண்டு என்னைப் பார்த்துப் பெரிதும் ரசித்துக்கொண்டிருந்தார்.

நான் "தலைவர் எனக்குக் கொடுத்த நேரம் 30 நிமிடம். இப்பொழுது 28நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 2 நிமிடத்தில் முடித்துக்கொள்வேன்" என்றேன்.

உடனே தலைவர் எழுந்து என்னை ஆலிங்கனம் செய்துகொண்டு க்ஷக்ஷஇன்னும் 1.:2மணி நேரம் பேச வேண்டும். இதுவரையில் 'செம்' என்னும் பதத்திற்குத் தான் உரை நிகழ்த்தினீர்கள். 'தமிழ் என்பது பற்றிப் பேசுங்கள். நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய கருத்துக்கள் பல தங்களிடம் இருக்கின்றன' என்று கூறினார். பின்னர் நான் 1/2 மணி நேரம் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துப் பேசினேன். தலைவர் முடிவுரையில் இவரை நான் 'புராணப் பிரசங்கியாயிற்றே! வெறும் புராணக் கதைகளைத்தான் பேசுவார் என்று எண்ணி ஏமாந்தேன். நுண்மாண் தமிழ்க் களஞ்சிய நூலறிஞர் என்பதை இப்பொழுது கண்டு வியந்தேன்.' என்று பாராட்டி முடிவுரை கூறினார்.

## 12. சக்ரவாகம்

மதுரையில் வடக்காடிவீதியில் திருப்புகழ் மண்டபத்தில் ஒருமுறை நான் விரிவுரை செய்துகொண்டிருந்தேன். வைகுண்டம் ஐயர் என்பவர் பிடில் வாசித்துக்கொண்டிருந்தார். நான் சூரியகாந்தம் என்ற ராகம் பாடினேன். அவர் சக்ரவாகம் என்ற ராகத்தை வாசித்தார். சூரியகாந்தம் 17வது மேளகர்த்தா, காகலி நிஷாதத்தை உடையது. சக்ரவாகம் 16வது மேளகார்த்தா கைசிகி நிஷாதத்தை உடையது. எனவே சூரியகாந்தத்திற்கும் சக்ரவாகத்திற்கும் நிஷாதத்தில் தான் வேற்றுமை உண்டு.

நான் அவருடைய பிழையை எடுத்துச் சொன்னால் சபையிலுள்ளோர்கள் அவரைக் குறைவாக எண்ணுவார்கள். அவர் பலருக்கும் பாடம் சொல்லிப் பிழைக்கின்றவர். நான் குறை கூறினால் அவருடைய பிழைப்புக்கு ஊனம் ஏற்பட்டுவிடும். அவர் என்னை 'இவர் விரிவுரை செய்பவர் தானே! இவருக்கு என்ன இசைஞானம் இருக்கப் போகின்றது' என்று எண்ணினார் போலும்.

நான் சூரிய காந்தம் பாட அவர் சக்ரவாகத்தையே வாசித்துக் கொண்டிருந்தார். நான் சூரியகாந்தத்தை விடுத்து சக்ரவாகத்தைப் பாடத் தொடங்கிவிட்டேன். அவர் என் வழிக்கு வரவில்லை. அவர் வழிக்கு நான் போய்விட்டேன். அந்தப் பிரச்சினை அத்துடன் முடிந்துவிட்டது.

(தொடரும்)

# இராமநாதன் கல்லூரியில் காந்தி ஜெயந்தி தின்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மகாத்மாகாந்தி அடிகளின் 138 ஆவது ஜெயந்திதினம் கொண்டாடப்படுவது மகிழ்ச்சிக்குரியது. காந்தீயம் செத்துவிடவில்லை. காந்தீயம் இன்றும் வாழ்கின்றது. காந்தீயம் ஒரு அன்பியலாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் கடந்த ஞாயிறன்று அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் நடாத்தப்பட்ட சத்திய விஞ்ஞானம் நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போது தெரிவித்தார்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் தலைவர் கோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் நூலின் முதலாவது பிரதிநிதியை முதுபெரும் புலவர் கலாபூஷனம் வை.க.சிற்றம்பலம் பெற்றுக்கொண்டார்.

உப பீடாதிபதி பா.தனபாலன் தனது வெளயீட்டுரையின் போது மேலும் குறிப்பிட்டதாவது.

காந்தியினுடைய சிந்தனைகள் இன்று இந்தியாவில் பரம்பிவருகின்றன. இவற்றின் அடிப்படையில் உலகத்தின் அபிவிருத்தி நோக்கிய பாய்ச்சலில் இந்தியா இப்போது முன்னணியில் திகழ்கின்றது காந்தீயம் இன்றும் உயிரோட்டத்துடன் இருந்து வருகின்றது.

இன்றைய எமது சமுயதாயத்தில் அன்பு இல்லாமல் போய்விட்டது. துன்பத்திலும், துயரத்திலும் மூழ்கிப் போயிருப்பவர்களை ஆற்றுப்படுத்துவார் இல்லை மனிதத்துவம் கூட இல்லாமல் போய்விட்டது.

இந்த நிலையில் தான் காந்தீயச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பவேண்டும். இந்த வகையில் காந்திசேவா சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சத்திய விஞ்ஞானம் நூல் மக்கள் மத்தியில் பரவலாக்கப்பட வேண்டும் என்றார்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் தலைவர் கோ.க.தம்பிப்பிள்ளை அங்கு உரையாற்றும் போது,

காந்தீயத்தில் ஆன்மீகமும் அரசியலும் இணைந்து இருக்கின்றன. காந்தீயம் காலத்தின் தேவையாகும். உலக நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு காந்தீயமே ஒரே வழியாகும்.

மகாத்மாகாந்தி ஆன்மீகத்தில் அரசியலையும் இணைத்தே பார்த்தார். அவ்விதமே செயல்பட்டார். ஆன்மீகமும் அரசியலும் இணைந்து தான் செயல்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சண்முகநாதன் அதிபர் க.செல்வக்குமார் ஆகியோரும் உரையாற்றினார். (த-6)

# இயற்கை அனர்த்தங்களால் உலகில் கடந்த ஆண்டு 2,50,000பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு உலகில் இடம பெற்ற இயற்கை அனர்த்தங்களினால் 2இலட்சத்து 50ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் அதிகமானோர் இலங்கை உட்பட 13நாடுகளைத் தாக்கிய சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த் மற்றும் காயமடைந்தோரின் எண்ணிக்கை 2 இலடசத்து 32 ஆயிரத்து 10 எனக் கணிக்கப்பட்டுள்ளது.

உலக இயற்கை அனர்த்தம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2004 ஆம் ஆண்டு இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மும்மடங்கால் அதிகரித்துள்ளதாகவும் அது 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10மடங்கு அதிகரிப்பு எனவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-9)

# கட்டாய மதமாற்றம் செய்ததற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை

மதமாற்றச் சட்டமூலத்தை கிடப்பில் போட்டுவிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுக்கு உறுதியளித்துள்ளது இதற்கான உறுதிமொழியை பெறுவதற்கு தாம் விரிவான பேச்சுக்களை நடத்த வேண்டியிருந்ததாக அமெரிக்கா இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையரசின் அதிகாரிகளுடபட பௌத்த, இந்து, முஸ்லிம் மதத தலைவர்களும் தொடர்பு கொள்ளப்பட்டு உரையாடல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

கட்டாய மதமாற்றங்கள் நடைபெற்று வருவதாக இது தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டாலும், இதற்கான சான்றுகள் ஒன்றையேனும் எவராலும் எடுத்துக்காட்ட முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் வாஷிங்டனிலுள்ள இலங்கையின் பௌத்த விகாரை பிரதமபிக்கு வண.மகரகம தம்மசிறிதேரர் கருத்துத் தெரிவிக்கையில், கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை தேடி முறையான ஆய்வுகள் செய்யப்படவில்லை என்பதே உண்மை என்றார்.

இதேவேளை, கட்டாய மத மாற்றத்தடுப்புச் சட்டத்தை ஜனாதிபதித் தேர்தல் தினமான நவம்பர் 17ஆம் திகதிக்கு முன் நிறை வேறறும்படி ஜாதிகஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது. (த-6)

# ஆட்பதிவுக் கட்டளைச் சட்டமூலம் நிறைவேற்றம்

ஆட்களைப் பதிவுசெய்வதற்கான கட்டளைச் சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அடையாளஅட்டையினைக் கடடாயப்படுத்தும் நடவடிக்கைகளை செயற்படுத்த முடியாது என்றும் இது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதேவேளை, நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த இரண்டு திருத்த சட்ட மூலங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை குற்றவியல் கோவை, குற்றவிசாரணைக்கோவை ஆகியவற்றின் திருத்தச்சட்ட மூலங்கள் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்களின கோரிக்கைகளுக்கு அமைய பாராளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜே.வி.பியின் கோரிக்கை நியாயமானது என ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்பிரிஸ் தெரிவித்தார். ஏற்கனவே இந்த சட்டமூலங்கள் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரபபட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு தமது அதிருப்தியினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## பக்தாத்தில் பயங்கரம்

# மசூதி வாயிலில் கார்க் குண்டு வெடிப்பு 30 பேர் உடல்சிதறிப் பலி; 135 பேர் படுகாயம்



(பக்தாத்)

ஈராக்கில் சதாம் ஆதரவு தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 30பேர் ஸ்தலத்திலேயே உடல்சிதறிப் பலியாகியுள்ளதுடன் சுமார் 135ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்லாமியர்களின் புனித ரம்ழான் மாதம் தொடங்கியுள்ளது. இதையொட்டி ஈராக்கின் பக்தாத்நகரிற்கு தெற்கே இருக்கும் ஹில்லா நகரில் உள்ள மசூதியில் சிறப்புத்தொழுகை நடந்து கொண்டிருந்தது.

சியாம் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதி இது. ஏற்கனவே சியா பிரிவினருக்கும் சன்னி பிரிவினருக்குமிடையே மோதல் நடைபெற்று வருகிறது. 'ரம் ழான்' மாதத்தில் தாக்குதலை தீவிரப் படுத்துங்கள் என்று சதாம் ஆதரவு தீவிரவாதிகளுக்கும் சன்னி பிரிவினருக்கும் அல்-கெய்டா தலைமை அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஹில்லா நகரில் சியாம் முஸ்லிம் பகுதியில் தொழுகை நடந்து கொண்டிருந்த பொழுது திடீரென்று குண்டு வெடித்தது. மசூதியையொட்டி நிறுத்தப்பட்ட காரில் இருந்து குண்டுவெடித்தது.

இதில் தொழுகை நடத்திக்கொண்டிருந்த 30பேர் ஸ்தலத்திலே உடல் சிதறி பலியானார்கள். 135ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். அந்த மசூதியும் கடுமையாகச் சேதமடைந்தது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பதற்றநிலை அதிகரித்துள்ளது. இதேவேளை, இந் நகரில் உள்ள ஒரு காய்கறி சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை கார்க்குண்டு ஒன்று வெடித்ததில் ஏறக்குறைய 10பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ற)




ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு ஏராளமான அமெரிக்க வீரர்கள் பலியாகிவிட்டனர். இதுதவிர கார்க் குண்டுத் தாக்குதலில் காயமடைந்து ஏராளமான வீரர்கள் அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். வோஷிங்டனில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் வீரர்களை அதிபர் ஜோர்ச் புஷ் சந்தித்து ஆறுதல்கூறிய காட்சி.

# திரிசூல் ஏவுகணை வெற்றிகரச் சோதனை

மிகவும் நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் குறுகிய தூர திரிசூல் ஏவுகணை நேற்று முன்தினம் வெற்றிகரமான முறையில் சோதனை நடத்தப்பட்டது.

தரையில் இருந்து வானில் பறந்துசென்று




குறிப்பிட்ட இலக்கையோ அல்லது எதிரிகளின் போர்விமானத்தையோ குறிதவறாமல் தாக்கக்குடிய இந்த திரிசூல் ஏவுகணை ஒரிஸா மாநிலம் பாலசோரில் இருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் கடலில் இருந்து சண்டிப்பூர் ஏவு தளத்துடன் இணைந்து ஏவி சோதனை பார்க்கப்பட்டது.

நேற்று முன்தினம் சரியாக 3.15மணிக்கு திரிசூல் ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது. குறிப்பிட்ட இலக்கில் ஆள்இல்லாத விமானத்தை அது தாக்கியது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னதாக 2.47மணிக்கு அந்த விமானம் பறந்து சென்றது.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு தயாரித்துள்ள இந்த திரிசூல் ஏவுகணை முற்றிலும் உள்நாட்டு தொழில் நுட்பத்தைக்கொண்டது. இராணுவம், விமானப் படை, கடற்படை ஆகிய முப்படைகளும் இந்தத் திரிசூல் ஏவுகணையை பயன்படுத்தும்படி அமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திட எரிபொருளால் இயங்கும் இந்த ஏவுகணை சுமார் 9கிலோ மீற்றர் தூரம் சென்று தாகக்கூடியது. அணு ஆயுதத்தை ஏந்திச் செல்லக்கூடியது முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணை யானது 3மீற்றர் நீளமும் 200சென்றி மீற்றர் அகலமும் உடையது. மிகவும் விரைவாக பறந்துசெல்லும் ஆற்றல் உடையது எனபது குறிபபிடத்தக்கது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# அதிபர் முஷாரப் மீது கொலை முயற்சி; 4 விமானப்படை வீரர்களுக்குத் தூக்கு


(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பைக் கொல்ல முயன்ற வழக்கில் விமானப் படை வீரர்கள் நான்கு பேருக்கு மரண தண்டனை விதித்து அந்நாட்டு இராணுவ நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு டிசம்பர் 14மற்றும் 25ஆம் திகதிகளில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை கொல்ல இரண்டு முறை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக அந்நாட்டு விமானப்படையைச் சோந்த வீரர்கள் நான்குபேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

பாகிஸ்தான் இராணுவ கோர்ட்டில் கடந்த ஆறு மாதங்களாக இந்த வழக்கு விசாரணை நடைபெற்றுவந்தது. கடந்த திங்கட்கிழமை வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. கொலை முயற்சியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு விமானப்படை வீரர்களுக்கு அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

பாகிஸ்தான் விமானப்படை அதிகாரி இந்த தகவலை உறுதிப்படுத்தினார். இந்த வழக்கு தொடர்பாக ஏற்கனவே இரண்டு விமானப்படை வீரர்களுக்கு ஆயுள் தண்டனை வழ்ங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



இந்தியப் பெருங்கடல் பகுதியில் பிரஞ்சுத் தீவில் உள்ள பிடோன் டிலா போர் நெயஸ' எரிமலை எப்போதும் துடிப்புடன் இருக்கும். எரிமலையில் இருந்து தகிக்கும் குழம்பு நேற்று வெளியேறத் தொடங்கிய காட்சி.



'மிஸ் ஆசியா' அழகிப்போட்டி கொங் கொங்கில் நேற்று முன் தினம் நடந்தது. சீனா, கொங்கொங், ஜப்பான், தென்கொரியா, வியட் நாம், தாய்லாந்து உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பலர் இப்போட்டியில் பங்குபற்றினர். சீனா அழகி கிட்டிவாங் (நடுவில்) மிஸ் ஆசியாப்பட்டத்தைத் தட்டிச்சென்றார். இரண்டாவதாக கொரியாவைச் சேர்ந்த ஹாங் இன் யங் (இடது), மூன்றாவதாக சீனாவைச் சேர்ந்த அன்னா ஜகய் ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டனர்.

# உயரமான பெண்களுக்கு குழந்தை ஆசை இல்லையாம்!


உயரமான பெண்களுக்குக் குழந்தை ஆசை இல்லையென்று ஆராய்ச்சித் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர் டென்னிஸ் டீடி, ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் மிரியம்லாஸ்மித் ஆகியோர் ஓர் ஆய்வு மேற்கொண்டனர்.

1220 பெண்களிடம் இந்த ஆய்வை நடாத்தினார்கள். "குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஆசையா? வாழ்க்கையின் இலட்சியம் என்ன?" என்பது போன்ற பல்வேறு கேள்விகள் இவர்களிடம் கேட்கப்பட்டன. இவர்களில் 680பேர் 20முதல் 30வயதிற்குப் பட்டவர்கள்.

கணக்கெடுப்பில் உயரமான பெண்கள் தங்களுக்கு குழந்தை பெற்றுக்கொள்ள ஆசை இல்லையென்று தெரிவித்தார்கள். அப்படியே குழந்தை பெறுவதனாலும் திருமணத்திற்குப் பிறகு பல ஆண்டுகள் தாமதித்து தான் குழந்தை பெறவேண்டும். என்று அந்த உயரமான பெண்கள் தெரிவித்துள்ளனர். வேலைக்குப் போகவேண்டும் உயர்ந்த பதவிகளைப் பிடிக்க வேண்டும் என்பதே இந்த உயரமான பெண்களின் உயர்ந்த ஆசை.

உயரம் குறைந்த சராசரி உயரம் கொண்ட பெண்கள் குழந்தை குட்டிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் அவர்களைக் கொஞ்சி மகிழவேண்டும் என்ற ஆசையை வெளிப் படுத்தினார்கள். (ற)



மத்திய அமெரிக்காவில் கடந்த செவ்வாய்க்கிழமை வீசிய சூறாவளியால் 56பேர் பலியானதுடன் மெக்சிக்கோ வளைகுடா கரையோரப பகுதிகள் பயங்கர சேதமடைந்ததும் தெரிந்ததே.

பபாலோபான் நதிக்கரையோரம் சூறாவளியால் தூக்கி வீசப்பட்ட பாரிய கப்பல் சாய்ந்து கிடக்கிறது.

# உலக லெவன் அணி அவுஸ்திரேலியாவிடம் தோல்வி
# உலக அணியில் பிரகாசித்தனர் இலங்கை வீரர்கள்





உலக லெவன் -அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான சுப்ப சீரிஸ் தொடரின் முதலாவது ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் உலக லெவன் அணியை 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா தோற்கடித்துள்ளது.





டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் சம்பியனாக விளங்கும் அவுஸ்திரேலிய அணியுடன் உலக லெவன் அணி மூன்று ஒருநாள் போட்டிகளிலும் 6 நாட்கள் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டியிலும் பங்கேற்கும் சுப்ப சீரிஸ் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.


முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் மெல்போர்னில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கில்கிறிஸ்டும், கடிச்சும் களமிறங்கி மகிவும் சிறப்பாக விளையாடி ஓட்ட எண்ணிக்கையை உயர்ததினர். நீண்ட இடைவெளிக்குப் பின் கில்கிறிஸ்ட் அதிரடியாக ஆடி அக்தர், பொலக், பிளின்ரொப் ஆகியோரின் பந்துகளை விளாசித் தள்ளினார். முதல் விக்கெற்றுக்காக இருவரும் 80 ஓட்டங்களை எடுத்தபோது கில்கிறிஸ்ட் 45 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கப்டன் ரிக்கி பொண்டிங்கடிச்சுடன்இணைந்து ஆடிய வேளையில் சுழறபந்து வீச்சாளர் முரளியும், விக்றோரியும் சிறப்பாகப் பந்து வீசி சீரான இடைவெளியில் விக்கெறறுக்களை கைப்பற்றினர். கடிச் 58 ஓட்டஙகளுடனும், பொணடிங் 23, சைமன்ஸ் 36, ஹசே 32, லீ 26 ஓட்டங்களை எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தார்கள். முடிவில் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெற்றுக்களை இழந்து 255 ஓட்டங்களை எடுத்தது.

உலக லெவன் அணி தரப்பில் விக்றோரி 4 விக்கெற்றுக்களையும், முரளீதரன் 2 விக்கெற்றுக் களையும், பொலக், கலீஸ் தலா ஒரு விக்கெற்றையும் கைப்பற்றினர்.

256 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உலக லெவன் அணிக்கு தொடககமே சோகமாக அமைந்தது. சங்க காராவும், சேவாக்கும் ஆட்டத்தை ஆரம்பித்தனர். இந்நிலையில் சேவாக் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதன்பின் ஒரு முனையில் சங்ககாரா சிறப்பாக விளையாடிக கொண்டிருக்க மற்றொரு முனை யல் உலக லெவன அணி வீரர்கள் களத்துக்கு வருவதும் பெவிலியன் திரும்புவதுமாக இருந்தனர்.






கலீஸ் 8, டிரா விட் 4, பீற்றர் சன் 2, அப்ரிட்டி 2 ஓட்டங்களுடனும், கலிஸ் ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். பின்னர் பிளின்ரொப் சங்ககாராவுடன் இணைந்து சிறபபாக ஆடிக் கொணடிருந்த சமயம் சங்ககார 64 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் பிளின் ரொப் - 38, விக்றோரி 15, அக்தர்-10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதியில் உலக லெவன் அணி 41.3 ஓவரில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை எடுத்தது. அவுஸ்திரேலியா அணி சார்பாக வாட்சன்-3, விக்கெற்றுக்களையும், லீ, மெக்ராத் தலா 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இறுதியில் உலக லெவன் அணி 93 ஓடடங்களால் தோல்வியடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மூன்று விக்கெற்றுக் களை வீழ்த்திய அவுஸ்திரேலிய அணியின் ஷேன் வாட்சன் தெரிவுசெய்யப்பட்டார். (து-19)

## காயம் காரணமாக பாக். தொடரிலிருந்து இங். வேகப்பந்து வீச்சாளர் ஜோன்ஸ் நீக்கம்



கணுக்கால் காயம் காரணமாக பாக். தொடரிலிருந்து இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி அடுத்த மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க உள்ளது.

இதற்கான அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. இதில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான அணியில் வேகப்பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ் சேர்க்கப்பட்டிருந்தார்.

ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்டில் இவருக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் இவரால் அந்தப் போட்டியில் பங்கேற்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஜோன்சுக்கு மருத்துவ பரிசோதனை நடந்தது.

மருத்துவ சோதனையின முடிவில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமை டாக்டர் பீட்டர் கிரிகா் கூறுகையில்,

சைமன் ஜோன்ஸ் காயத்தை எப்படியாது குணப்படுத்தி விடலாம் என முயற்சித்தோம். காயத்தை சத்திரசிகிச்கை மூலமாகத்தான் சரி செய்ய முடியும். இன்னும் 3 மாதங்களாவது அவருக்கு ஓய்வு தேவைப்படும்.

பாகிஸ்தான் தொடரில்அவர் கணடிபாக இடம் பெற முடியாது. அடுத்த ஆண்டு இந்திய சுற்றுப் பயணத்தில் இவர் பங்கேற்கலாம் என்றார். (அ19)

## நான்கு மாதங்களின் பின் மூன்று மணிநேரம் பயிற்சியில் ஈடுபட்டார் சச்சின்



இந்தியாவின் ரஞ்சித் கோப்பையில் பங்கேற்கும் மும்பை கிரிக்கெட் அணிக்கான பயிற்சி முகாமை சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் தொடக்கி வைத்தார்.


வலது முழங்கையில் ஏற்பட்டுள்ள எலும்பு முறிவால் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக விளையாடாமல் ஓய்வு எடுத்து வந்த டெண்டுல்கர், இப்போது ஓரளவு குணம் அடைந்ததையடுத்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

மொகாலியில் 10ஆம் திகதி முதல் 13ஆம திகதி வரை நடக்கும் சேலஞ்சர் கோப்பை போட்டியில் டெண்டுல்கர் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில், இந்த ஆண்டு ரஞ்சித் கோப்பை போட்டியில் பங்கேற்கும் மும்பை கிரிக்கெட் அணிக்கான பயிற்சி முகாம் மும்பை வான்கடே மைதானததில் நேற்று முன்தினம் தொடங்கியது.

முகாமை டெண்டுல்கர் தொடங்கி வைத்து வீரர்களுடன் 3 மணி நேரத்துக்கு மேல் பயிற்சியில் ஈடுபட்டார். முதலில் களத்தடுப்பு பயிற்சியில் ஈடுபட்ட டெண்டுல்கர் பின்னா் பந்துவீச்சு பயிற்சியிலும் ஈடுபட்டார்.

இதுபற்றி டெண்டுல்கர் கருத்து தெரிவிக்கையில், கையில் வலி மிகவும் குறைந்துவிட்டது. சேலஞ்சர் கோப்பை போட்டியில் பங்கேற்க முடியும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளது. நான்கு மாதங்களுக்கு மேலாக கிரிக்கெட் விளையாடாமல் இருந்தது எனக்கு மிகவும் ஏமாற்றம். விரைவில் கிரிக்கெட்டில் களம் இறங்க ஆசையுடன் இருக்கிறேன். இந்திய அணியின் வைத்தியர் ஆனந்த் ஜோஷியிடம் ஆலோசனை பெற்றபின் தீவிரமாக கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பது பற்றி முடிவு செய்வேன் என்றார். (அ-19)

**விளையாட்டு செய்திகள்**



பெர்லினில நடந்து வரும் ஐரோப்பிய ஹெவி- வெயிட குத்துச்சண்டை போட்டியில் பல்கேரியாவின் திகோமிர் டிஸ்ச்கோவும், ஜெர்மனியின் ஆண்ட்ரீஸ் ச'னிடெரும மோதினர். திகோமிா கொடுக்கும் குத்தை தடுக்க முயற்சிக்கிறார் சினிடெர்.



டெல்லியில் இந்திராகாநதி தங்கக் கோப்பைக் கான சர்வதேச மகளிர் ஹொக்கிப் போட்டி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவுஸ்திரேலியாவும், இத்தாலியும் மோதின. இதில் 4-1 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலியா வென்றது.

# சுகமாக வாழ சூழல் பாதுகாப்பு

மக்களின் உன்னத வாழ்வினையும் சமுதாய மேம்பாட்டையும் வாழ்க்கைத்தர உயர்வினையும் கணிக்கும் காரணியாக விளங்கும் சூழல் பாதுகாப்பில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பங்குண்டு.

மக்கள் மனம் திருந்தி சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க முன்வந்தாலன்றி சூழல் பாதுகாப்பை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள முடியாது. சூழலைச் சுத்தமாக வைத்திருந்து சுகாதாரத்தைப் பேண வேண்டுமென எத்தனையோ பொது அமைப்புக்கள் முன்வந்துழைத்துக்கொண்டிருக்கின்றன. இதனடிப்படையிலேயே பிரதி வருடமும் செப்ரம்பர் மாதம் 7ஆம் திகதி சர்வதேச சூழல் பாதுகாப்புத் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில், யாழ் .மாவட்ட திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகம் சுற்றுச் சூழல்பாதுகாப்பு சம்பந்தமாக கைக்கொள்ளப்பட வேண்டிய சில வழிமுறைகளைப் பொதுமக்கள் முன்வைத்துள்ளது.

தாயகப் பிரதேசத்தின் சூழலைச் சுத்தப்படுத்தி சுகாதாரம் பேணுவதன் மூலம் மக்களின் ஆரோக்கியமான நல்வாழ்வை மேம்படுத்தமுடியும்.

## பணிகள்

*பொலித்தீன், பிளாஸ்டிக், அஸ்பெஸ்டல் போன்ற சூழலுக்கு ஒவ்வாத நச்சுப் பொருட்கள் எமது தாயகத்தைச் சூழ்ந்துள்ளன. அவற்றினை தாயகத்திலிருந்து அகற்றி இயற்கைச் சூழலைப் பேணுதல்.

*உக்கி அழிந்துபோகாத கண்ணாடித்துண்டங்கள், தகரம் போன்ற திண்மக் கழிவுகளை அகற்றுவதன் மூலம் அத்தகைய கழிவுகளின் பரவலான தேக்கத்தைத் தவிர்த்தல்.

*சீராக, திட்டமிட்டு வெளியேற்றப்படாத கழிவு நீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதால் ஏற் படுகின்ற துர்நாற்றம், தொற்றுநோய் தாக்கம் என்பற்றைத் தவிர்க்கும் வகையில் கழிவுநீர் நேர்த்தியாக வழிந்தோடக் கூடியவாறு கால்வாய்களை செம்மையாக வடிவமைத்தல்.

*மாசடைந்த நீரைத் தேக்கி வைத்திருக்கும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களைச் சுத்தம் செய்து நீர்த்தேக்கத்தை அழிப்பதன் மூலம் நோய்ப்பெருக்கமில்லாத ஆரோக்கியமான வாழ்வை உறுதிப்படுத்தல்.

*கழிவு சேகரிப்பு பொதிகளைப் பொருத்தமான இடங்களில் வைத்தல்.

*சூழலைச் சுத்திகரித்துத் தரும் இயற்கை வடிகட்டிகளான மரங்களை இயன்றளவிற்கு நாட்டிப் பராமரித்தல்.

ஆகியன முக்கிய பணிகளாக அமைய வேண்டும்.

தனிநபர்கள், கிராமிய அமைப்புக்கள், பாடசாலைகள், அரசதிணைக்களங்கள், பிரதேசசபைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகசங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், வணக்கத்தலங்கள், விடுதலைப்புலிகளின் அமைப்புக்கள், மாகாண சுகாதாரசேவை பிரதிப்பணிப்பாளர்களும், சுகாதார வைத்திய அதிகாரிகளும், போக்குவரத்துக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், சுற்றுச் சூழல் அதிகாரிகள், கடற்றொழிலாளர், கூட்டுறவுச்சமாசங்கள், இடைத்தங்கல் முகாம்கள், கைத்தொழில் கூடங்கள், ஊடகங்கள் ஆகிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயலாற்றினால்தான் சுற்றுச் சூழல் பாதுகாப்பைச் சிறப்புற மேற்கொள்ளமுடியும்.

சூழல் பாதுகாப்பைச் சிறந்த முறையில் மேற் கொள்வதில் தனிமனிதர் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. கீழ்வரும் நடைமுறைகளைக் கைக்கொள்வதன் மூலம் தனிமனிதர் தம் பங்களிப்பை நல்கலாம்.

*தனிநபர் சுகாதாரம் பேணல்

*வீடு வளவு மற்றும் வீட்டு எல்லைப்புறங்களைச் சுத்தமாக்கல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் வீட்டுச் சூழலில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையில் புதைத்தல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

கிராமிய அமைப்புக்கள் கீழ்வரும் செயற்பாடுகள் மூலம் சூழல் பாதுகாப்புக்கு உதவலாம்:

## கிராமிய அமைப்புக்கள்

*கிராமத்தவர்களின் செயற்பாடுகளை ஒன்றிணைத்து நெறிப்படுத்தல்.

*கிராமத்தின் பொது இடங்களிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் கிராமியச் சூழலில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடி விடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாக்கக் கூடிய வகையில் புதைத்தல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பொது இடங்களில் கழிவு சேகரிப்பான்களை வைத்தல்.

மற்றும் இப்பணியில் உதவக்கூடிய அமைப்புக்கள்:

## தேசிய எழுச்சிப் பேரவை

*சூழல் பாதுகாப்பு முன்னோடிதின நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல்.

*கிராமிய மட்டத்திலான செயற்பாடுகளை ஒன் றிணைத்து நெறிப்படுத்தல்.

*தனிநபர் செயற்பாடுகளை கிராமிய மட்ட அமைப்புக்கள் ஊடாக கண்காணித்தல்.

*கிராமமட்டத்தில் கழிவகற்றல் செயற்பாட்டில் இணைய முன்வரும் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து கண்காணித்தல்.

## பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள்

*உட்புற வளாகத்தையும் பாடசாலை எல்லைப்புற சூழலையும் சுத்தம் செய்தல்.

*தெரிவு செய்யப்படும் பொது இடத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப் போகாத திண்மக்ககழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாக்க கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல். அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பாடசாலையை அண்மித்த பிரதேசத்தில் சுற்றுப்புறச்சூழல்பாதுகாப்பு சம்பந்தமான கருத்தூட்டல்களையும் விழிப்புணர்வுகளையும் மேற்கொள்ளல்.

*பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரிப்பதன் மூலம் தாயகத்தின் பசுமைச் சூழலைப் பேணுதல்.

*கழிவு சேகரிப்பான்களை பாடசாலை கட்டடத் தொகுதியில் வகுப்பறைகளில் வைத்தல்.

## அரச திணைக்களங்கள்

*திணைக்களங்கள் ஒவ்வொன்றும் அவர்களது பிரதேச எல்லைப்புறங்களை துப்பரவு செய்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறதியாகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் திணைக்களச் சூழலில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வா றான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடி விடுதல்.

*உக்கிப்போகாத திண்மக் கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல் உக்கிப்போகக் கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை உரமாக்கக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல். அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*திணைக்களச் சூழலில் பொருத்தமான இடங்களில் மரங்களை நட்டுப் பராமரித்தல்.

*RDA/RDDஎன்பன தமது பராமரிப்பில் உள்ள பாதைகளின் பற்றைகளை வெட்டி வீதி துப்பரவாக்கம் செய்து அதனை தொடர்ச்சியாகப் பேணும் சிறப்புச் செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

## மாநகர, நகர, பிரதேச சபைகள்

*திண்மக்கழிவுகளின் இறுதியகற்றலை மேற்கொள்தற்கான ஒழுங்குகளைச்செய்தல்.

*இறுதியகற்றலை செய்யும் பொருட்டு புதைக்கக்கூடிய பொருத்தமான இடத்தினை தெரிவு செய்து குழிகளை அமைத்து புதைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள் ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி அகற்றுவதற்கான நடவடிக்கைகளை செய்தல்.

*திண்மக்ககழிவுகளை வகைப்படுத்தி சேகரிப்பதற்கான உக்கக்கூடியதான பைகளை சம்பந்தப்பட்ட நிறுவத்திடமிருந்து பெற்று உரியவர்களுக்கு வழங்குதல்.

*கழிவுகளை வகைப்படுத்தி சேகரிக்கக் கூடிய வகையில் பொது இடங்களில் கழிவு சேகரிப்பான்களை வைத்தல்.

*கழிவகற்றும் செயற்பாட்டை தொடர்ச்சியாகப் பேணுவதன்மூலம் கழிவுகளின் தேக்கத்தை தவிர்த்தல்.

*பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்பதற்கான வலைக்கூடுகளைப் பொருத்தமான கழிவகற்றும் இடத்தில் அமைத்தல்.

*இறுதியகற்றல் மேற்கொள்வதற்கான சகல ஒழுங்குகளையும் சூழல் முன்னேடிதினத்திற்கு முன் நிறைவேற்றி தயார் நிலையில் வைத்திருத்தல்.

*கழிவு நீர் தேங்கி நிற்காது தொடர்ச்சியாக வழிந்தோடக்கூடிய வகையில் கால்வாய்களை வினைத்திறனாக செப்பனிடல்.

## போக்குவரவுக் கழகங்கள்

*போக்குவரத்தின்போது பயணிகள் கழிவுகளை வெளியிலே வீசி எறியாத வகையில் அவற்றை சேகரிப்பதற்கான பைகளை வாகனங்களின் உள்ளே வைத்து பொது கழிவு சேகரிப்பானில் போடுதல்.

*இந்த நடைமுறை தொடர்பாக வழிச்செல்லுநர்களுக்கு அறிவுறுத்தல்.

*பேரூந்து தரிப்பிடங்களில் சேகரிக்கப்படும் கழிவுகளை இறுதியகற்றலுக்குரியவாறு ஒழுங்குபடுத்தல்.

*தமக்குச் சொந்தமான இடங்களை சுத்தமாக வைத்திருத்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதிகயகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பேரூந்து தரிப்பிடங்களில் பொது கழிவு சேகரிப்பான்களை வைத்தல்.

## வர்த்தக சங்கங்கள் (கடைகள்)

*வணிக நிலையங்களின் உட்புறச் சூழலையும் எல்லைப்புற சூழலையும் சுத்தம் செய்தல்.

*தெரிவு செய்யப்படும் ஒரு பிரதேசத்தில், இடத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக் கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*கழிவுகளைச் சேகரிக்கக்கூடிய வகையில் வர்த்தக நிலையங்களில் சேகரிப்பு சாதனங்களை வகைப்படுத்தி வைத்தல்.

*மேற்கொள்ளப்படும் நடைமுறை தொடர்பாக வாடிக்கையாளர், நுகர்வோருக்கு அறிவுறுத்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாககூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதிகயகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பொருத்தமான இடங்களில் மரக்கன்று களை நாட்டிப் பராமரிப்பதன் மூலம் தாயகத்தின் பசுமைச் சூழலைப் பேணுதல்.

## கூட்டுறவுச்சங்கங்கள்

*கூட்டுறவு நிலையங்களின் உட்புறச் சூழலையும் எல்லைப்புற சூழலையும் சுத்தம் செய்தல்.

*தெரிவு செய்யப்படும் ஒரு பிரதேசத்தில், இடத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவகற்றும் இடங்களில் கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*கழிவுகளைச் சேகரிக்கக்கூடிய வகையில் கூட்டுறவு நிலையங்களில் சேகரிப்பு சாதனங்களை வகைப்படுத்தி வைத்தல்.

*மேற்கொள்ளப்படும் நடைமுறை தொடர்பாக வாடிக்கையாளர் நுகர்வோருக்கு அறிவுறுத்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரித்தல்.

## விவசாய அமைப்புக்கள்

*தமக்குரிய பிரதேசத்தில் சுத்தம் செய்தவற்காக உரியவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படல்.

*தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும்போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*அங்கத்தவர்களின் செயற்பாடுகளை ஒன்றிணைத்து நெறிப்படுத்தல்.

*கழிவகற்றும் இடங்களில் கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறன இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*பயிர்ச்செய்கை கழிவுகளை மண்வளத்தைப் பேணுவதற்காகப் பயன்படுத்தல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பயிர்ச்செய் நிலங்களில் விவசாயிகளின் செயற்பாடுகளை கண்காணித்துநெறிப்படுத்தல்.

*கழிவகற்றும்போது பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக் கூடிய வகையில் புதைத்தல் அல்லது இறுதிகயகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்

*வாய்க்கால், குளங்களை பற்றைகளை வெட்டி சுத்தப்படுத்தல்.

(தொடரும்...)

> நீதியான நடையையும் நிகழ்வில் திருப்தியையும் கைக்கொள்ளும் ஒருவன், பிறர் என்ன நினைப்பர், என்ன சொல்வர், என்ன செய்வர் என்பதை கனவிலும் கருதான்
> - மார்க்ஸ்

வலம்புரி

# இனப்பிரச்சினைக்கான தீர்வை யார் முன்வைப்பார்கள் ?

ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குவதென அறிவித்துள்ளன.

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டமைக்கு அமைவாக இரண்டு கட்சிகளும் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ள போதிலும் அவை தமது ஆதரவை வழங்குவதற்காக, ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த நிபந்தனைகள் எவை என்பது ஆராயப்படவேண்டிய விடயம்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அமைச்சரவையில் இருந்து விலகியவர்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வழங்கிய ஆதரவை அவர் திடீரென நிறுத்தியதால் மீண்டுமோர் பொதுத்தேர்தல் ஏற்படவேண்டியதாயிற்று.

இவையெல்லாம் நடந்து முடிந்த கதை. ஆயினும் அரசியலில் ரவூப்ஹக்கீம் குத்துக்கரணம் அடித்ததினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான உறவு பாதிப்படைந்தது.

அதன் காரணமாக தற்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முடியாமல் போயிற்று.

ஆக, மகிந்த ராஜபக்ஷவுக்கு பேரினவாதிகளான ஜே.வி.பி.யும் ஹெல உறுமயவும் ஆதரவு வழங்குகின்றன என்பதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆதரவை வழங்க மறுத்து விட்டது என்பது பொருளல்ல.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்ததில் ஆச்சரியப்படுவதற்கு இடம் இல்லை.

ஏனெனில் காலா காலமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக்கட்சியையே ஆதரித்து வந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றாத வேளைகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு கிடைத்தமையும் நிஜமே. இவ்வாறு ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட ஆதரவுப்படலங்கள் ஒருவாறு பூர்த்தியாகிவிட்டன.

ஜே.வி.பியும் ஹெலஉறுமயவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஆதரவு வழங்குவதென்ற முடிபை எடுத்துள்ளன.

இவ்வாறு சிறிய கட்சிகளின் ஆதரவு யார் யாருக்கென்பது தெரிய வந்துவிட்டதாயினும் இதில் எந்தக்கட்சியேனும் 'இனப்பிரச்சினைக்கு யார் சமாதானத் தீர்வைக்காண்பதாக உறுதி தருகிறார்களோ அவர்களுக்கே எங்கள் ஆதரவு' எனக் கூறியதாகத் தெரியவில்லை.

எந்தக் கட்சியைப் பார்த்தாலும் அவை தம்முடைய நலனையும் அரசியல் லாபத்தையும் மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படுகின்றன.

மக்கள் படும் துன்பங்களை நீக்குதவற்காக நாட்டில், நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்காக தமது ஆதரவை வழங்க முன்வரும் கட்சிகள் எவையும் இல்லையென்பதே உண்மை.

# அரசின் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கும் ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

(கொழும்பு)

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கோரி வெளியிடப்பட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

எதிர்ககட்சித் தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள விடயங்கள் நடைமுறை சாத்தியமற்றவையென கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

400 கிராம் பால்மாவை 139 ரூபாவிற்கு வழங்குவதாகக் கூறப பட்டுள்ளது. தற்போது 166 ரூபாய் மற்றும் 136 ரூபாய் என்ற அடிப்படையில் சந்தையில் இரண்டுவகையான பால்மாக்க்ள் விற்பனை செய்யப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டிலிருந்து பால்மாவை இறக்குமதி செய்து விற்பனை செய்யவுள்ளார்.இது சாத்தியமற்றது என்று ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பின் தலைவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை கண்டு அச்சமடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது பல வாக்குறுதிகளை அரசாங்கம் வழங்கியது.

ஒரு இலட்சத்து 10ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். 350 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யப்படும 16 ரூபா என்ற உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு செய்யப் படும் போன்ற பல பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்பட்டமை இன்னும் நாட்டு மக்களின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இதனால் எதனைக் கூறினாலும் நாட்டுமக்கள் நம்பத் தயார் இல்லை என பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கிய தேசியக்கட்சி இராணுவம் குறித்து பாரிய முரண்பாட்டுக் கருததுக்களை வெளிப்படுத்தியதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்சதெரிவித்தார். சாதாரண படை நிலைகள் 847 இருக்கின்றன. 3 இராணுவப்படைப் பிரிவுகளையும் இணைத்து ஒரு புதிய படைப்பிரிவு அமைக்கப்படும்.

பல படைப்பிரிவுகளை உள்ளடக்கிய பிரதானபடை உருவாக்கப்படும்.இவ்வாறாகவே எமது நாட்டின் இராணுவக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் 43 படைப்பிரிவுகள் உள்ளன என அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இராணுவம் தொடர்பாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவர் பொதுமக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் கேலப்பத்திரன கருத்துத்தெரிவிக்கையில், சோமவன்ஸ தெரிவித்த கருத்திற்கெதிராக நாம் தொடர்ந்தும் எதிர்ப்புநடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம்.

அவரைத் தேசத்துரோகி என்று கருதி நாட்டிலிருந்து வெளியோற்றும் வரை நாடு தழுவிய ரீதியில் நடவடிக்கை இடம் பெறும் என்றார். (ற-9)

# தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உரிய முறையில் செயற்படவில்லை

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் வந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உரிய முறையில் செயற்படவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

செஞ்சிலுவைச்சங்கத்தின் வருடாந்த அறிக்கையிலேயே இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. உரிய முறையில் சுனாமி முன்னெச்சரிக்கை செய்யப்பட்டிருந்தால் ஆழிபபேரலையினால் பலியான பலரது உயிர்களைக் காப்பாற்றி இருக்க முடியும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லண்டனில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிப்பாளரின் தகவலின்படி சுனாமி ஆழிப் பேரலையின் பின்னர் இலங்கையில் சுமார் 500 வரையிலான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சேவையில் ஈடுபட்டதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# இ.தொ.கா., மு.கா. என்பவற்றின் ஆதரவினால் ரணில் ஜனாதிபதியாகிவிட முடியாது

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஆறுமுகம் தொண்டமான், ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஆதரவு வழங்கினாலும் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகமுடியாது என்று ஜே. வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமாரதிஸா நாயக்க தெரிவிததுள்ளார்.

இலங்கை நூலக மத்திய நிலையத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஊடகவியாளர் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுததேர்தலிலும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும், ஐக்கிய தேசியக் கட்சியினருடனேயே இணைந்திருந்தனர்.

எனினும் அத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 49வீதமான வாக்குகளையே பெறமுடிந்தது.

ஆகவே, இக்கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளதைப் புதுமைப்படுத்திப் பேசுவதற்கு இங்கு எதுவுமே இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# அரச ஊழியரின் இடமாற்றங்கள் நவ.17 வரை தற்காலிக நிறுத்தம்

(கொழும்பு)

தேர்தல் காலப்பகுதியில் எந்தவொரு அரச ஊழியருக்கும் இடமாற்றம் அளிக்கவேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தல் காலங்களில் அரச ஊழியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கினால் தேர்தல் நடவடிக்கைகள் பாதிப்படையக்கூடும் என்பதனாலேயே இந்த காலப்பகுதியில் இடமாற்றங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் தர்மசேன திஸாநாயக்காவிடம் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார். இதற்கமைய அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் உளளூராட்சி மன்ற ஊழியர்கள் ஆகியோரின் இடமாற்றங்கள் நவம்பர் 17ஆம் நாள் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# வாக்குச் சாவடி அமைப்பு குறித்த வர்த்தமானி நவ.7இல் வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான வாக்குச்சாவடிகளை அமைப்பது குறித்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

அன்றைய தினம் வெளியிடப்படும் வர்த்தமானியில் வாக்குச் சாவடி அமைக்கப்படும் இடங்கள்குறித்த தகவல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களுக்கான வாக்குச் சாவடிகள தொடர்பாக விபரங்கள் பத்திரிகைகள் ஊடாக வெளியிடப்படும்.

சட்டவிரோத வாக்குகளிப்பினைத் தடுப்பதற்காக ஆழிப் பேரலையினால் காணாமல் போன மற்றும் உயிரிழந்தவர்களின் வாக்காளர் அட்டைகள் அனுப்பப்பட மாட்டாது என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (ற-4)

# தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் இயற்கை என்கிறோம். சிறப்பு நிலையில் வெளிப்படுத்திக்கொள்வதை அவதாரங்கள் என்கிறோம். உங்கள் உடலுக்கு பின்னால் எவ்வளவு சக்தி, எத்தனை வகை ஆற்றல்கள் , வேகங்கள் எல்லம் மறைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுவாமி விவேகானந்தர்

# கல்முனையில் ஹர்த்தால்

அம்பாறை கல்முனைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கொல்லப் பட்டமையைக் கண்டித்து நேற்று கல்முனை நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு போக்குவரத்துச் சேவைகள் மந்தகதியில் நடைபெற்றன. அதேவேளை அம்பாறையிலிருந்து கல்முனை நகரை நோக்கி வந்த லொறி ஒன்றின் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து கல்முனை நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (ச-8)

# இராணுவ பௌசர் மீது குண்டு வீச்சு எட்டுப் பொதுமக்கள் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் இராணுவத்தண்ணீர் பௌசர்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சுத்தாக்குதலில் பொதுமக்கள் 8பேர் காயமடைந்துள்ளனர்.

கடைத்தெரு வழியாகச் சென்ற இராணு பௌசர் வண்டி மீது இனந்தெரியாத நபர்களினால் நேற்றுப் பிற்பகல் 1மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது. அது இலக்குத் தவறி வேறொரு இடத்தில் விழுந்ததில் பொது மக்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த 8பொதுமக்களும் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவர்களில் கடுமையாக பாதிப்பிற்குள்ளான 5பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒரு பெண் உட்பட மூன்று பேர் தமிழர்கள், ஐந்து பேர் முஸ்லிம்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-8,4)

# ஒஸ்லோ பயணம்

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கர் இன்று ஒஸ்லோ பயணமாகிறார்.சமாதானநடவடிக்கைகள் குறித்து இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்ட பிரட்ஸ்கர் தனது சந்திப்புக்கள் குறித்து விளக்குவதற்காக ஒஸ்லோ பயணமாகிறார். (ச-4)

# ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். (ச-8)

# நேரடிப்பேச்சுக்களை தொடர்ந்தால்...

நேற்று காலை இடம்பெற்ற நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருடனான சந்திப்பை முடித்துக் கொண்டு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த நிறுத்த ஒப்பந்தம் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சூழல் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழர் தாயகத்தில் எமது ஆதரவாளர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் கொல்லப்படுவது தீவிரமடைந்து வருகின்றது. இதைநிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

*ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை*

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவாக பிரிட்டன் வெளியிட்ட அறிக்கை தொடர்பான எங்களது கருத்தையும் கவலையும் தெரிவித்தோம். இந்த நடவடிக்கையானது இலங்கைத்தீவில் அமைதியைக்கொண்டு வரும் இரு தரப்பினருடைய சம அந்தஸ்தை, சம அங்கீகாரத்தை பலவீனப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக தமிழ் மக்கள் அச்சமடைந்துள்ளது குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச சமூகத்தின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை பலவீனமடைந்து போகாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம்.

யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுக்களை உடனடியாக தொடங்க வேண்டும். இது தொடர்பான எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்ற மும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டி னோம். அண்மையில் வெளிவிவகார அமைச்சர் படுகொலையும் இங்கு உள்ள சம்பவங்களையும் வைத்துக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் அத்தகைய முடிவை மேற்கொண்டதாக நோர்வேத் தரப்பினர் கூறினர்.

நாங்கள் அது பற்றி ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுத்தோம். சமதரப்பு என்ற அடிப்படையில் தமிழர்களின் பிரதிநிதி களாகிய தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை சொல்லுவதற்கான பாதை களை மூடிவிட்டு மற்றொரு தரப்பான அரசாங் கம் முன்வைக்கின்ற குற்றச்சாட்டையும் கருத்துகளையும் ஏற்றுக்கொள்வது என்பது எந்த விதத்திலும் நியாயமற்றது என்பதை யும் தெளிவாக விளக்கினோம்.

இதை ஐரோப்பிய ஒன்றியத்திடம் நோர்வேத்தரப்பு வெளிப்படுத்தும் என்று நம்புகின் றோம். ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவா னது நோர்வே அனுசரணையின் முயற்சிக்கு மட்டுமல்ல, சமதரப்பில் ஒரு தரப்பினராகிய தமிழர் தரப்பை பலவீனப்படுத்தி இருக்கிறது. தென்னிலங்கை தீவிரவாத சக்திகள் உற்சாகமடைந்து இருக்கிறார்கள். தமிழர்கள் மீது இனவன்முறையை ஆக்கிரமிப்பை கட்ட விழ்த்து விட சிங்கள இனவாதிகளுக்கு உற்சாகம் அளிப்பது போல் இம் முடிபு அமைந்திருக்கிறது என தமிழ்ச்செல்வன் கூறினார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் வரவேற்கப் படக்கூடாது என்று பிரிட்டன் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதனடிப் படையில் அமைதி முயற்சிகளில் தொடர்புடைய இரு தரப்பினராகிய தமிழ் மக்களின் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கான வழி வகைகள்தான் தற்போது மூடப்பட்டுள்ளது. துரதிஷ்டவசமானது இது. தமிழ் மக்கள் அனைவரையும் கவலை கொள்ளச்செய்துள்ளது.

*ஜனாதிபதி தேர்தலில் தமிழரின் நிலைப்பாடு*

எங்களைப் பொறுத்தவரையில் சமாதான முன்னெடுப்புக்களில் காத்திரத்துடனும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் வலுவுடனும் இருக்கின்றோம்.

ஆனால் தென்னிலங்கையைப் பொறுத்தவரை அதிகாரங்களை கைப்பற்றுவதில் தான் காலம் காலமாக செயற்பட்டு வருகிறார்கள். இப்போதுள்ள சூழலில் இரண்டு ஜனாதிபதி வேட்பாளரும் தங்களுக்கான வாக்கு வங்கிகளை நிரப்பிக்கொள்ளும் யுத்திகளில் தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள். எவருமே தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான விடயத்தை வெளிப்படுத்தவில்லை.

சிங்கள இனவாதிகளுடன் சேர்ந்து கொண்டு தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாடுகளுக்கு எதிரான கருத்துக்களை மகிந்த ராஜபக்ஷ முன்வைத்து வருகிறார்.

அதேபோல் ரணில் விக்கிரமசிங்கவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்ற வற்றின் இணக்கப்பாட்டுடன்தான் அமைதி முயற்சிகள் சாத்தியப்படுமென்று கூறிவருகிறார். ஆகவே இரு தரப்பினரதும் அண்மைக்கால கருத்துக்கள் எதுவும் தமிழ் மக்களுக்குச் சார்பானதாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய சூழலை ஏற்படுத்துகின்றனவாக இல்லை.

*சமாதானப் பேச்சு*

மீண்டும் அமைதிப்பேச்சுக்களை இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடத்தில் நடாத்துவது தான் சமாதான சூழலை தோற்றுவிக்கும். இதில் சர்வதேச சமூகம் சரியான முடிவை மேற்கொள்ளுமென்று நம்புகின்றோம்.

சர்வதேச சமாதானத்தின் ஆதரவு,அனுசரணை ஆகியவற்றின் அடிப்படையில்தான் தமிழர் தரப்பின் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டது. நீண்ட சமாதான காலத்தின் மீது தமிழ்மக்கள் விரக்தியும் வெறுப்பும் அடைந்திருக்கிறார்கள். அதனுடைய வெளிப்பாடு தான் தங்களுடைய அரசியல் அபிலாசைகளை நேரடியாகத் திரண்டுவந்து சர்வதேச சமூகத்திற்கு கோரிக்கை விடுக்கின்ற நிகழ்வுகள் அண்மைக்காலமாக தீவிரமடைந்துள்ளன.

நிச்சயமாக இந்த அபிலாசைகளை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து தீர்க்கமானமுடிவை வழங்கும் என்று நம்புகின்றோம் என தமிழ்ச்செல்வன் மேலும் கூறினார். (ச-4,8,9)

03.10.2005 முதல்
01.11.2005 வரை
தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
உடனே விஜயம் செய்யுங்கள்
விசேட கழிவு
லைடன் புடவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 222 2381



வாடகைக்கு
இல.156 முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கடை வாடகைக்கு கொடுக்கப்படும்
தொடர்பு: சீ.சிவராசா
[வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக]
இல.4, (158) முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
(C-1714) T.P. NO. 222 5782

மனோகரா | யாழ்.
இன்று முதல்
பார்த்திபன், லஷ்மிராய், வடிவேல் நடித்த
குண்டக மண்டக...
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30 (பு.நே)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மா.நாகராஜா
யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கல்வியியலில் முதுகலைமாணிப்பட்டம் பெறும்
திரு. மாரிமுத்து நாகராஜா
(அதிபர், புத்தளம் இந்து தமிழ் மகாவித்தியாலயம்) அவர்க ளையும்,
பண்பாட்டியலில் முதுகலைமாணிப் பட்டம் பெறும்
திரு. சிவசுப்பிரமணியம் உமாபாலன்
(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்மராட்சி) அவர்களையும் பாராட்டி மென் மேலும் சிறப்படைய வாழ்த்தி மகிழ்கின்றோம்.
-நண்பர்கள்-



சி.உமாபாலன்
(9942)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு
நமீதா நடித்த
சாணக்கியா
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரவிகிருஷ்ணா, கோபிகா
நடித்த
பொன்னியின் செல்வன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.